لا إله إلا الله محمد رسول الله

# நபி வழி

உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்

## தமிழக வடமண்டல மாநாடு
## சிறப்பு மலர்




## AHMADIYYA MUSLIM JAMA'ATH
## ZONAL CONFERENCE - 2011

NORTH ZONE - TAMIL NADU at COIMBATORE

on SUNDAY 27th FEBRUARY 2011





இந்திய முதன்மைச் செயலர் அவர்கள், சட்ட மன்ற
உறுப்பினர் திரு. S.P. வேலுமணி அவர்களுக்கு
சால்வை போர்த்தி கவுரவிக்கும் காட்சி

கோயமுத்தூர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தலைவர்
இந்திய முதன்மைச் செயலர் அவர்களுக்கு
சால்வை போர்த்தி கவுரவிக்கும் காட்சி






அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்
இந்திய முதன்மைச் செயலர் அவர்கள் உறுதிமொழி கூறும் காட்சி

மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் உறுதிமொழி கூறும் காட்சி





மாநட்டின் போது தொழுகை நடைபெறும் காட்சி

கோயம்புத்தூர் அத்ஃபால் சிறுவர்கள்
உருது கவிதை பாடும் காட்சி







மாநட்டின் போது மூன்று புத்தகங்கள் வெளியிடப்பட்டு அதனை மொழியாக்கம் செய்தவர்கள் முதல் பிரதியை பெறும் காட்சி

# ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சிறப்புகள்

## திருக்குர்ஆனிலிருந்து....

“உங்களிலிருந்தே ஒருவர் உங்களிடம் தூதராக வந்துள்ளார். உங்களுக்கு ஏற்படும் துன்பம், அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கிறது. உங்கள் நலனில் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார். நம்பிக்கை கொண்டவர்களின் மீது பரிவு காட்டுபவராகவும், மிக்க கருணை காட்டுபவராகவும் இருக்கின்றார்.” ***(திருக்குர்ஆன் 9:128)***

“நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பியுள்ளோம்.” (21:108)

“நீர் கூறுவீராக: (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ் (வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.” ***(3:32)***

“அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பி அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுகின்ற உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் மிக அழகிய முன்மாதிரி இருக்கின்றது.” ***(33:22)***

## நபிமொழியிலிருந்து....

“ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு ஐந்து சிறப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவை எனக்கு முன்பு எவருக்கும் வழங்கப்படவில்லை. 1. ஒரு மாத கால பயண தொலைவில் இருப்பவருக்கும் (என்னைப் பற்றிய) திகில் உணர்வினால் நான் உதவி செய்யப்பட்டுள்ளேன். 2. எனக்காக முழு பூமியும் பள்ளிவாயிலாகவும் தூய்மையானதாகவும் ஆக்கப்பட்டுள்ளது. எனது உம்மத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தொழுகைக்கான நேரம் வந்துவிட்டால் அவர் (அதில்) தொழுது கொள்ளலாம். 3. போரில் கிடைக்கும் பொருள்கள் எனக்கு ஆகுமானவையாக ஆக்கப்பட்டுள்ளன. எனக்கு முன்னர் வேறு எவருக்கும் இது ஆகுமானதாக்கப்படவில்லை. 4. எனக்கு பரிந்துரைப்பதற்காக உரிமை வழங்கப்பட்டுள்ளது. 5. முந்தைய நபி குறிப்பிட்ட சமுதாயத்திற்காக அனுப்பப்பட்டனர். நான் எல்லா மக்களுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன்.” ***(புகாரி, முஸ்லிம்)***

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூலிலிருந்து....

“நேரான வழியின் மிகக் குறைந்த படித்தரம் கூட நமது (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் மனிதனுக்கு ஒரு போதும் கிடைக்க முடியாது. அப்படியிருக்கும் போது இறைதூதர்களின் இமாமைப் பின்பற்றாமல் நேர்வழியின் உயர்ந்த படித்தரங்கள் எப்படிக் கிடைக்க முடியும்? நமது நபி (ஸல்) அவர்களை உண்மையாகவும், முழுமையாகவும் பின்பற்றாமல் கண்ணியம் மற்றும் சிறப்புத்தன்மையின் எந்தவோர் அந்தஸ்தையும், கவுரவம் மற்றும் நெருக்கத்தின் எந்தவொரு தகுதியையும் நாம் ஒருபோதும் பெறமுடியாது.” ***(இஸாலயே அவ்ஹாம் பகுதி 1 பக்கம் 138)***

“மனிதனுக்கு அருளப் பெற்ற – அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப் பெற்ற உயர் தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றுள்ளும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றின் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம். அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை

எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்புக்குரியவரும் தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவர்.

எனவே, அவ்வொளி அவருக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் அவரின் குணயில்புகளைச் சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது. மேலும் இச்சிறப்பு முழுமையாகவும், நிறைவாகவும், உயர்வாகவும் நம் தலைவரும், நம் அன்புக்குரியவரும், நம் வழிகாட்டியும், கல்விகற்காத நபியும், உண்மையானவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே இருந்தது. ***(ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 160,161)***

## மறைவுச் செய்தி

சென்னை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த ஜனாபா ரஷீதா பேகம் சாஹிபா 24.02.2011 அன்று பிற்பகல் இறையடி சேர்ந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்).

25.02.2011 அன்று காலை 10 மணிக்கு அன்னாருக்காக ஜனாஸா தொழுகை தொழப்பட்டு சாத்தான்குளம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நல்லடக்க மைதானத்தில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த ஜனாபா ரஷீதா பேகம் அவர்கள் சென்னை ஜமாஅத்தின் நீண்ட கால உறுப்பினர் ஆவார்கள். இவர் மறைந்த A. M. அப்துல் கைய்யூம் சாஹிபின் மனைவி ஆவார்.

அன்னாருடைய பிரிவினால் வருந்தும் அவருடைய பிள்ளைகள், உற்றார் உறவினர்களுக்கு அல்லாஹ் சாந்தியும் சமாதானமும், ஆறுதலும் வழங்குவானாக.

அன்னாருக்கு மன்னிப்பும் பேரின்ப வாழ்வும் கிடைக்க இறைவன் அருள்புரிவானாக.

## மறைவுச் செய்தி

சென்னை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த ஜனாபா அமத்துல் காதிர் சாஹிபா 13.03.2011 அன்று மாலை இறையடி சேர்ந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்).

14.03.2011 அன்று காலை 10 மணிக்கு அன்னாருக்காக ஜனாஸா தொழுகை தொழப்பட்டு சாத்தான்குளம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நல்லடக்க மைதானத்தில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த ஜனாபா அமத்துல் காதிர் சாஹிபா அவர்கள் இலங்கை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முன்னாள் தலைவர் மர்ஹூம் M.E.M ஹஸன் சாஹிப் அவர்களின் மகளும், சென்னை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் செயற்குழு உறுப்பினர் ஜனாப் S.H. வஸீம் அஹ்மது சாஹிபின் மனைவியும் ஆவார்.

அன்னாருடைய பிரிவினால் வருந்தும் அவருடைய கணவர், பிள்ளைகள், உற்றார் உறவினர்களுக்கு அல்லாஹ் சாந்தியும் சமாதானமும், ஆறுதலும் வழங்குவானாக.

அன்னாருக்கு மன்னிப்பும் பேரின்ப வாழ்வும் கிடைக்க இறைவன் அருள்புரிவானாக.

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின்

# தூதுச் செய்தி

அன்புள்ள ஜமாஅத் சகோதரர்களே !

அஸ்ஸலாமு அலைக்கும். வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ.

உங்கள் மத்தியில் மண்டல தர்பிய்யத் ஜல்ஸா நடைபெறுவதை அறிந்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. அல்லாஹ் இதனை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் இதில் கலந்து கொள்பவர்களுக்கு மநாட்டின் அருள்களிலிருந்து முழுமையான முறையில் பயன் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. இந்த சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்கு சில விஷயங்களின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன்.

நமது ஜல்ஸாக்கள், இஜ்திமாக்கள் ஆன்மீக மற்றும் தர்பிய்யத் குறிக்கோள்களுக்காக நடத்தப்படுகின்றன. அனைவரும் ஒருங்கிணைந்து நல்ல விஷயங்களைக் கேட்பதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது. மேலும் இறை வணக்கங்கள், துஆக்கள் செய்வதற்கு மிகவும் அருமையான சூழ்நிலை உருவாகின்றது. ஆன்மீகத்தில் முன்னேற்றம் கிடைக்கின்றது. ஆன்மாவை தூய்மைப்படுத்துவதற்கான சிறந்த வழிமுறையாகிய தொழுகையை நிலை நாட்டுவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது. ஒரு மனிதன் நிறைவேற்ற வேண்டியது தொடர்பாக திருக்குர்ஆனிலும், நபிமொழிகளிலும் மிகவும் அழுத்தமாகக் கூறப்பட்டிருப்பது தொழுகை தான். அல்லாஹ் கூறுகின்றான்: ''நிச்சயமாகத் தொழுகை, நம்பிக்கை கொண்டவர்கள் (முறைப்படி) குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையாகும்.'' (4:104) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையை, நம்பிக்கை கொண்டவர்களின் மிஃராஜ் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். தொழுகை மனிதனுக்கு ஆன்மீக பயிற்சி அளிப்பதாகும். அதன் மூலமாக உண்மையான ஆன்மீக பயிற்சிக்கான வழிவகை உருவாகிறது. எனவே ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும், இறை திருப்தியை பெறுவதற்காகவும் தொழுகைகளைப் பேணுங்கள். இதன் பக்கம் ஜமாஅத்தும், கிளை அமைப்புகளும் கவனமூட்டிக் கொண்டிருக்க வேண்டும். பெற்றோர்களும் தமது வீடுகளில் பிள்ளைகளை கண்காணித்து வரவேண்டும். மேலும் இவ்வகையில் நல்ல முன்மாதிரியை நீங்கள் எடுத்து வைத்தால் உங்களுக்கு ஓர் ஆன்மீக முன்னேற்றம் கிடைக்கும் - இன்ஷா அல்லாஹ்.

இரண்டாவது முக்கியமான விஷயம், தப்லீக் ஆகும். இதுவும் நமது மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: ''அல்லாஹ்வின் பக்கம் அழைத்து நற்செயல்கள் செய்பவரைவிட மிக அழகிய கூற்றைக் கூறுபவர் யாராக இருக்க முடியும் ?'' (41:34) இந்த அறிவுரையின் படி மிக அதிகமாக கவனம் செலுத்தவேண்டிய தேவை இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் மிகச் சிறந்த தப்லீக் செய்பவர்களாக இருந்தனர். அவர்களும் உலகின் பலதரப்பட்ட மக்களிலிருந்து வந்தனர். ஆனால் பைஅத் செய்ததுடன் மார்க்கக் கல்வியைக் கற்றனர். ஆன்மீக

**நபி வழி சந்தா விபரம்**

**ஆண்டு சந்தா - ₹ 100/-** **தனி பிரதி - ₹ 10/-**

D.D அல்லது காசோலை மூலம் அனுப்புபவர்கள் K.NASIR AHMED என்ற பெயரில் அனுப்பவும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க : நிர்வாகி - **நபி வழி** அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்
11, முதல் பிரதான சாலை, யு.இ. காலனி, கோடம்பாக்கம், சென்னை - 600 024. **Ph : 2481 7174**

முன்னேற்றத்திற்காக தொழுகைகள், துஆக்களில் அழுத்தம் கொடுத்தனர். அன்பர்கள், உறவினர்கள், தம்மைச் சுற்றியுள்ளவர்கள் ஆகியோருக்கு மனம் திறந்து தப்லீக் செய்தனர். அவர்களின் தப்லீகை இறைவன் ஒப்புக் கொண்டவாறு அதற்கு இனிய கனிகளை வழங்கினான். எனவே தப்லீக், முபல்லிக்மார்களின் மூலமாக மட்டுமே நடைபெறும் என்ற சிந்தனை இருக்குமென் றால் அந்த சிந்தனையை மாற்றவேண்டிய தேவை இருக்கின்றது. ஒவ்வோர் அஹ்மதியும் முபல்லிக் ஆக மாற வேண்டிய தேவை இருக்கிறது. உங்கள் முன்மாதிரியை நல்லதாக மாற்றுங்கள். ஆன்மீக வளர்ச்சிக்கு முயற்சி செய்யுங்கள். திருக்குர்ஆன், ஹதீஸ், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள் ஆகியவற்றைப் படித்து, உங்கள் மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். இதன் மூலமாக மற்றவர்க ளுடன் பேசுவதற்கான தைரியமும், வீரமும் உங்களுக்கு கிடைக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயம், கிலாஃபத் ஆகும். அது பற்றிய அறிவும், ஞானமும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு மட்டுமே கிடைத்திருக்கிறது. இன்று உலகில் ஆன்மீக முன்னேற்றத்திற்கு இமாமின் தேவை என்பது உணரப்படுகின்றது. ஆயினும் அனைவரும் இறைவனால் உதவி செய்யப்பட்ட தலைமையை இழந்தவர்களாக இருக்கின்றனர். வானத்தின் இந்த தலைமை அஹ்மதிய்யா கிலாஃபத் என்ற வடிவத்தில் அஹ்மதிகளாகிய நமக்கு அல்லாஹ்வின் அருளால் கிடைத்துள்ளது. இதன் உண்மையான அருள்களிலிருந்து பயன் பெறுவதற்காக உங்கள் வீடுகளில் காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களை முறைப்படி கேட்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். என்னுடன் நடக்கும் குழந்தைகளின் வகுப்புகளையும் அவர்களுக்கு காட்டுங்கள். உங்கள் அனைவருக்கும் காலத்தின் கலீஃபாவுடன் நேரடியாக தொடர்பு நிலைபெறுவதற்காக நீங்களும் துஆவிற்கான கடிதங்களை எழுதுங்கள்; பிள்ளைகளையும் எழுத வையுங்கள். நீங்கள் இதை செய்துவிட்டால் எல்லா ஆன்மீக, உலக, மார்க்க முன்னேற்றங்கள் உங்களுக்கு கிடைத்து விடும். ஏனெனில் எல்லாவிதமான முன்னேற் றங்களும் இன்று கிலாஃபத்துடன் தொடர்பு டையவையாக இருக்கின்றன.

அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் மாநாட்டின் அருள்களிலிருந்து முழுமையாக பயன் பெறும் நல்வாய்ப்பை வழங்குவானாக. உங்கள் அனைவருக்கும் இந்த அருளுக்குரிய சந்தர்ப்பத்தில் கேட்ட நல்ல விஷயங்களின்படி செயல்படும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்

**எளியவன்**

**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

***ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்***

## திருப்பூரில் தர்பிய்யத் கூட்டம்

திருப்பூரிலுள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பள்ளிவாசலில் கடந்த பிப்ரவரி 26 ஆம் நாள் சிறப்பு தர்பிய்யத் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டதிற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தமிழக வடமண்டல தலைவர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது தலைமை தாங்கினார். திருப்பூர் ஜமாஅத் கொள்கை பரப்புநர் மவ்லவி அமீருத்தீன் திருக்குர்ஆன் ஓதி அதன் பொருள் கூறினார். அடுத்து, ஜனாப் சய்யிது சுல்தான் அஹ்மது உருது கவிதை பாடினார். திருப்பூர் ஜமாஅத் தலைவர் ஜனாப் M. அப்துர் ரஹீம் சாஹிப் வரவேற்புரை நிகழ்த்தினார். மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் சிறப்புரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது உரையில் திருப்பூரில் பள்ளிவாசல் அமைவதற்கு முன்னால் உள்ள நிலையையும், பள்ளிவாசல் அமையப்பெற்ற பிறகு ஜமாஅத்தின் வளர்ச்சியையும் நினைவு கூர்ந்தார்கள். தமது உரையின் இறுதியில் துஆச் செய்து கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

## கோயம்புத்தூரில் நடைபெற்ற அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின்

# தமிழக வட மண்டல மாநாடு

தமிழக வடமண்டலம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக அதன் ஆண்டு மாநாடு கடந்த பிப்ரவரி 27ஆம் நாள் கோயம்புத்தூரிலுள்ள திரு. முத்துசாமி முதலியார் அரங்கில் நடைபெற்றது.

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இந்திய தலைவருக்கு வரவேற்பு**

கோவை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கட்டளையின்படி கோவைக்கு வருகை தந்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இந்திய முதன்மைச் செயலர் மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் அவர்களுக்கு கோவை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக விமான நிலையத்தில் உற்சாகமான வரவேற்பு வழங்கப்பட்டது. தமிழக வடமண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது சாஹிப், வருகை தந்த இந்திய தலைவருக்கு ஜமாஅத்தின் வடமண்டல பொறுப்பாளர்கள் மற்றும் கோவை ஜமாஅத்தின் பொறுப்பாளர்களை விமான நிலையத்தில் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

**கோவையில் தமிழக வடமண்டல மாநாடு**

கோவையிலுள்ள திரு. முத்துசாமி முதலியார் அரங்கில் கடந்த 27.02.2011 அன்று காலை சரியாக 10.30 மனிக்கு தமிழக வடமண்டல மாநாடு துவங்கியது. இம்மாநாட்டின் முதல் அமர்விற்கு தமிழக வடமண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது சாஹிப் தலைமை தாங்கினார். தமிழக வடமண்டல வஃபே நவ் செயலர் ஜனாப் T. J. முனவ்வர் இப்ரஹீம் திருக்குர்ஆன் ஓதி அதன் பொருள் கூறினார். ஜனாப் முஹம்மது சமீவுல்லாஹ் உருது கவிதை பாடினார். நாஸிர் அஃலா, காதியான் அவர்கள் கிலாஃபத்தின் நூற்றாண்டு உறுதி மொழியைக் கூற வருகை தந்த அனைவரும் எழுந்து நின்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனுப்பிய தூதுச் செய்தியை தமிழக வடமண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது சாஹிப் படித்துக் காட்டினார்கள். அந்த தூதுச் செய்தியின் தமிழாக்கம் வருகை தந்த அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது. (இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. காண்க.) அதனைத் தொடர்ந்து ஜனாப் பஷாரத் அஹ்மது சாஹிப் தலைமையுரை நிகழ்த்தினார்கள். தமது உணர்ச்சி பொங்கும் உரையில், அவர்கள் அஹ்மதிய்யத்தின் உயிர்த் தியாகிளை நிறைவு கூர்ந்தார்கள். அடுத்து இந்த அமர்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் அவர்கள் மாநாட்டின் அவசியம் மற்றும் அதன் பயன்கள் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வளர்ச்சி குறித்து உருது மொழியில் உரை நிகழ்த்தினார்கள். மவ்லவி M.ரபீக் அஹ்மது அவர்கள் அவரது உரையை உடனுக்குடன் தமிழாக்கம் செய்தார். கோவை ஜமாஅத்தின் சிறுமியர் அணியான நாஸிராத்துல் அஹ்மதிய்யாவைச் சார்ந்த சிறுமியர் குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையைப் புகழ்ந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) இயற்றிய அரபிக் கவிதையான கஸீதாவை பாடினார்கள். சென்னை ஜமாஅத்தின் கொள்கை பரப்புனர் மவ்லவி O.M.முஸ்ஸம்மில் அஹ்மது அவர்கள், 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தியவாறு அன்னாரின் வாழ்விலிருந்து சம்பவங்களை எடுத்துக் கூறினார்கள்.

இம்மாநாட்டிற்கு வருகை தந்த பேரூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. S.P. வேலு மணி M.L.A அவர்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்தியத் தலைவர் அவர்கள்

பொன்னாடை போர்த்தி அவர்களை வரவேற்றார்கள். சட்டமன்ற உறுப்பினர் தமது உரையில் இஸ்லாத்தின் மேன்மையையும், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை சம்பவங்களையும் அதனை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் நடைமுறைப்படுத்துவதாகக் கூறியதுடன் ஜமாஅத்தின் சமூகத்தொண்டுகளையும் பாராட்டினார்கள்.

அடுத்து உரை நிகழ்த்திய அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு. R. இராஜமாணிக்கம் அவர்களையும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின். இந்திய தலைவர் அவர்கள் பொன்னாடை போர்த்தி கவுரவித்தார்கள்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதாகத் தெரிவித்திருந்த பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. K. சுகுமார் M.P. அவர்கள் பட்ஜெட் தொடர் காரணமாக உடனடியாக டில்லி செல்வதால் கலந்து கொள்ள முடியாததைத் தொலைபேசி மூலம், அமீர் ஜனாப் பஷாரத் அஹ்மது அவர்களுக்கு தெரிவித்து மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மாநாட்டிற்கு வருகை தந்து சிறப்புரை நிகழ்த்திய முக்கிய பிரமுகர்கள் அனைவருக்கும் மண்டல அமீர் ஜனாப் பஷாரத் அஹ்மது அவர்கள் நன்றி கூறி முதல் அமர்வை நிறைவு செய்தார்.

#### புத்தக வெளியீட்டு விழா

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வடமண்டல புத்தக வெளியீட்டுக்குழு மூன்று புத்தகங்களை இம்மாநாட்டில் வெளியிட்டது. 1. அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியது என்ன? 2. உயிர்த் தியாகிகள் 3. நாற்பது நபிமொழிகள். இந்த மூன்று புத்தகங்களையும் மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் வெளியிட்டார்கள். அதன் முதல் பிரதிகளை அந்த நூல்களை தமிழாக்கம் செய்த மவ்லவிமார்கள் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

லுஹர், அஸர் கூட்டுத் தொழுகைக்குப் பிறகு உணவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

#### மாநாட்டின் இரண்டாம் அமர்வு

மாநாட்டின் இரண்டாம் அமர்வு 3.30 மணியளவில் மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் தலைமையில் நடைபெற்றது. சங்கரன் கோவில் ஜமாஅத்தை சார்ந்த ஜனாப் K.முஹம்மது அலி சாஹிப் திருக்குர்ஆன் ஓதி அதன் பொருளை கூறினார். கோவை ஜமாஅத்தின் சிறுவர் அணியான அத்ஃபாலுல் அஹ்மதிய்யா சிறுவர்கள் குழுவாக உருது கவிதை பாடினார்கள்.

கோட்டார் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை பரப்புனர் மவ்லவி M. ரஃபீக் அஹ்மது அவர்கள் ‘அஹ்மதிய்யா கிலாஃபத்தும் நமது பொறுப்புகளும்’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். ஜனாப் V.A.முஹம்மது யூசுஃப் அவர்கள் உருது கவிதை பாடினார். மவ்லவி K.மஹ்மூது அஹ்மது அவர்கள், ‘இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பங்கு’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். ஜனாப் முஸஃப்பர் அஹ்மது அவர்கள் இஸ்லாமிய தமிழ் பாடல் பாடினார். இந்த அமர்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழக தென்மண்டல அமீர் ஜனாப் A.P.Y. அப்துல் காதிர் அவர்கள், இமாம் மஹ்தியின் இனிய போதனைகளைப் படித்துக்காட்டி விளக்கம் கூறினார். திட்டக்குடி கொள்கை பரப்புனர் மவ்லவி அல்-அமீன் அவர்கள் ஒரு கவிதை பாடினார்.

கோவை ஜமாஅத்தின் இளைஞர் அணி

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

தலைவர் ஜனாப் ஃபெரோஸ்கான் அவர்கள் 'அஹ்மதி முஸ்லிம்களிடம் இமாம் மஹ்தியின் எதிர்பார்ப்பு' என்ற தலைப்பில் உணர்ச்சி பொங்க உரை நிகழ்த்தினார்.

நிறைவு உரை நிகழ்த்திய மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப், இம்மாநாடு எல்லா வகையிலும் இறைவனது அருளுக்குரியதாக அமைந்ததை எடுத்துக் கூறியதுடன் பல்வேறு ஊர்களிலிருந்து மாநாட்டிற்கு அதிக அளவில் அஹ்மதிகள் வருகை தந்ததற்கு நன்றி கூறி உருதுவில் உரை நிகழ்த்தினார்கள். அவர்களது உரையின் தமிழாக்கத்தை மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது அவர்கள் தமிழாக்கம் செய்தார்கள்.

மாநாட்டின் நிறைவாக தமிழக வடமண்டல இஸ்லாஹ்-வ-இர்ஷாது செயளர் ஜனாப் M.நயீம் அஹ்மது அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

மஃரிப், இஷா தொழுகைக்குப் பிறகு இரவு உணவு வழங்கப்பட்டது.

இம்மாநாட்டினை சிறப்பிப்பதற்காக கேரள மாநில கண்ணூர் மண்டல அமீர் ஜனாப் U.மன்சூர் அஹ்மது அவர்களும், கேரள மாநில எர்ணாகுளம் மண்டல அமீர் ஜனாப் அஹ்மது கபீர் அவர்களும், பாரத மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் துணைத் தலைவர் ஜனாப் ஷமீம் அஹ்மது அவர்களும் வருகை தந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்மாநாட்டிற்கு சென்னை இளைஞர் அணியினரும், கடலூர், பண்ருட்டி, திட்டக்குடி மற்றும் திருப்பூர் ஜமாஅத் உறுப்பினர்கள் தனிப் பேருந்துகள் மூலம் திரளாக வருகை தந்தனர்.

இந்த மாநாட்டிற்கான அனைத்துப் பணிகளையும் கோவை ஜமாஅத்தின் தலைவர் A.M. ஸாகிர் ஹுசைன் அவர்கள் தமது செயற்குழு மற்றும் கிளை அமைப்புகளின் உதவியுடன் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள். இம்மாநாட்டில் தமிழக வட மண்டல மற்றும் தென் மண்டல ஜமாஅத்துகளும் கேரளா மற்றும் இலங்கை ஜமாஅத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மாநாட்டு நிகழ்ச்சி பற்றிய செய்திகளை இரண்டு தொலைக்காட்சிகள் பதிவு செய்து செய்திகளில் ஒளிபரப்பு செய்தன. அவ்வாறே செய்தித் தாள்களும் நமது மாநாட்டு நிகழ்ச்சி பற்றிய செய்திகளை வெளியிட்டது குறிப்பிடதக்கது.

எல்லா வகையிலும் சிறப்பாக அமைந்த, இந்த மண்டல மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவக்குரும் எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும் ஆன்மீக, பௌதீக முன்னேற்றங்களை வழங்குவானாக.

**தகவல் : M. நயீம் அஹ்மது**
மண்டல இஸ்லாஹ்-வ-இர்ஷாது செயலர்
**தமிழக வட மண்டலம்**

## சூளூரில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டுவிழா

கோயமுத்தூரை அடுத்த சூளூரில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் கட்டவிருக்கின்ற பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த பிப்ரவரி 26ஆம் நாள் காலை 11 மணியளவில் நடைபெற்றது. இதனையொட்டி, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இந்திய முதன்மைச் செயலர், தமிழக வட மண்டல அமீர் அவர்கள், தமிழக தென் மண்டல அமீர் அவர்கள் மற்றும் ஜமாஅத் பொறுப்பளர்கள் பலரும் சூளூர் வருகை தந்தனர்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இந்திய முதன்மைச் செயலர் மவ்லான முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் பள்ளிவாசலுக்கான அடிக்கல்லை நாட்டிக் கூட்டு துஆ செய்தார்கள்.

தொடர்: 6

# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

**மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி)**

அத்தியாயம் - 5

## இளமைக்கால வாழ்க்கை

மிர்ஸா குலாம் முர்தஸா தம் மகனை தமது சொத்துக்களைப் பராமரிக்கும் பணியிலும், தமது குடும்பத்தின் இழந்த பெருமையை மீட்டெடுக்கும் பணியிலும் ஈடுபடுத்த பெரிதும் விரும்பினார். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அவற்றில் ஆர்வம் இருக்கவில்லை. அவர்களின் ஆர்வமெல்லாம் அதற்கு நேர்மாறாக இருந்தது. அவர்கள் செல்வத்தில் சிறந்து விளங்க விரும்ப வில்லை; மாறாக ஆன்மீகத்தில் உன்னத நிலையை அடைய விரும்பினார்கள். உலகியல் அந்தஸ்தில் மேலோங்க விரும்ப வில்லை; உண்மையான கண்ணியத்தைப் பெற விரும்பினார்கள். மிகச் சிறந்த அறிவாளியாக ஆக வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை; மாறாக நற்பண்புகளில் சிறந்து விளங்க வேண்டும் என விரும்பினார்கள். ஆற்றல் மிக்கவராகவோ காரியம் சாதிக்கும் சக்தியுடையவராகவோ மாறவேண்டும் என்று எண்ணவில்லை; உண்மையிலும், நேர்மையிலும், நாணயத் திலும் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பினார்கள். எப்படி இருந்த போதிலும் தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது தமது கடமை என்று கருதினார்கள். உயர்ந்த கொள்கைகளால் உந்தப்பட்ட மனிதர்கள் கூட தமது கடமைகளை நிறைவேற்றுவதற்காகத் தாம் போற்றும் கொள்கைகளையும், தாம் நேசிக்கும் எண்ணங்களையும் ஒதுக்கி வைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள். கீழ்ப்படிதலை யும், விருப்பத்துடன் தொண்டாற்றுவதையும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தெளிவாக உணர்ந்திருந்தார்கள். எனவே தமது விருப்பதிற்கு மாறானதாக இருந்தாலும் தமது தந்தையின் வழக்கு தொடர்பான பணிகளைக் கவனிப்பதில் கணிசமான நேரத்தைச் செலவு செய்தார்கள். தந்தையின் விருப்பத்திற்காக விவசாயம் சம்பந்தமான பணிகளையும் கவனித்தார்கள். ஆனால் அவர்களின் உள்ளம் அவற்றில் ஒன்றவில்லை.

ஒருமுறை டிவிஷனல் கமிஷனர் காதியானுக்கு வருகை தந்தார். ஓர் உயர் அதிகாரி வருகைதரும் பொழுது அவர் வருகின்ற வழியில் மூன்று நான்கு மைல்கள் முன்னே சென்று வரவேற்பது அக்கால வழக்கமாக இருந்தது. அதன்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரை வரவேற்கச் செல்ல வேண்டும் என்று அவர்களது தந்தையார் விரும்பினார். ஆனால் அது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இயல்புக்கு மாற்றமாக இருந்தது. அவர்கள் மரியாதை தெரிந்தவர்களாக இருந்தார்கள். அதே நேரத்தில் அடிமைக்குணம் அவர்களிடம் இருந்ததில்லை. தந்தையின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும் என்ற கடமையுணர்ச்சியின் காரணமாக அவர்கள் சென்றிருப்பார்கள். ஆனால் அன்றைய தினம் அவர்களுக்குச் சற்று உடல் நலக் குறைவு ஏற்பட்டிருந்தது. எனவே அவர்களால் அவரை வரவேற்கச் செல்ல முடியவில்லை. அச்செயல் அன்னாரின் தந்தைக்கு வருத்தத்தை அளித்தது. இத்தனைக்கும் தம் மகனின் தாழ்மைக் குணத்தையும், இறையச்சத்தையும், பயபக்தியையும் அவர் நன்கு அறிவார். தம் மகன் வாழ்கின்ற வாழ்க்கைதான் சிறந்ததும், சரியானதும் ஆகும் என்று அவர் சில நேரங்களில் குறிப்பிட்டாலும், உலகியல் காரணங்களால் அவர் தம் மகனின் எதிர்காலத்தை எண்ணி அஞ்சினார்.

இந்த வகையில் மிர்ஸா குலாம் முர்தஸா அதிருப்தியடைந்த மனிதராகவே இருந்தார். அவர் அஹ்மது (அலை) அவர்களை ஓர் அந்நியர் போலவும் அவ்வப்போது தம் இல்லத்திற்கு வந்து தம்மோடு உணவருந்திச் செல்லும் விருந்தினரைப் போலவும் கருதினார். அஹ்மது (அலை) அவர்களால் தம்மைப் போல இவ்வுலக விஷயங்களைச் சமாளிக்க முடியாது என்றும், பிற மனிதர்களோடு பழக முடியாது என்றும் கருதினார். இதனால் சில நேரங்களில் கடுமையான வார்த்தைகளால் கடிந்து கொண்டதுண்டு. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் எதிர்காலத்தை நல்ல முறையில் அமைக்க பாடுபடவேண்டும் என அவரது தந்தை மிகவும் விரும்பினார். ஆனால் இறைவனோ அவர்களுக்கு வேறுவிதமான சிறப்பை வழங்க முடிவு செய்திருந்தான். அவர்களின் உள்ளம் இறைவன் பக்கம் கொண்ட ஈடுபாட்டில் மேலும் மேலும் முன்னேறியது. அவர்கள் தம் சிந்தனைகளுக்கு மத்தியில் தனியாக இருக்கவே விரும்பினார்கள். தனியாக இருப்பதிலும், பிறர் கண்களிலிருந்து மறைவாக இருப்பதிலும் இன்பம் கண்டார்கள். உலகியல் புகழுக்கோ ஆன்மீகப் பெருமைக்கோ அவர்கள் ஆசைப்படவில்லை. ஒரு சாதாரண மனிதனாகவே தம் வாழ்நாளைக் கழிக்க விரும்பினார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது அரபிக் கவிதை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

“எனக்கு ஒரு நண்பன் இருக்கின்றான்; அவனது அன்பு என்மீது நிரம்பி வழிகின்றது; பதவி, அந்தஸ்து ஆகியவற்றின் மீது எனக்கு ஒரு வெறுப்பு உண்டு. உலகமும் அதன் பின்னால் ஓடுபவர்களும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருப்பதை நான் காண்கிறேன். ஆனால் எனது அன்பு உலகத்திலோ என்றைக்கும் எந்தத் தேவையும் இருந்ததில்லை. மக்கள் உலக இன்பங்களின் பக்கம் சாய்கிறார்கள். நானோ ஆனந்தமும், அதிர்ச்சியும் தரக்கூடிய முகத்தை நோக்கிச் சாய்கிறேன். என் அன்புக்குரியவனின் ஒளிவிடும் ஆடையோடு நான் இணைந்திருக் கிறேன். எந்த அளவுக்கென்றால்; ஒளியிழந் தும், இருண்டும் காணப்பட்டவை என்னிடம் ஒளிவிட்டுப் பிரகாசித்தன.

சிங்கங்களோ ஓநாய்களோ என் உடலைக் கிழித்தெறிந்த போதிலும் அவனை விட்டுப் பிரியமாட்டேன் என நான் உறுதி கொண்டுள்ளேன். மக்களின் அரசாட்சியோ அவர்களின் மரணத்தோடு மாய்ந்து போகிறது. ஆனால் என் அன்பனின் அரசாட்சியோ என்றும் விலகப் போவதில்லை.”

தம் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுகின்ற விதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கடினமான பயணங்களை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. டல்ஹவுஸியிலும், லாஹூரிலும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றில் லாஹூர் காதியானிலிருந்து 70 மைல் தூரத்தில் அமைந்திருந்தது. டல்ஹவுஸி 100 மைல் தூரத்திலும், கடல் மட்டத்திலிருந்து 8000 அடி உயரத்திலும் அமைந்திருந்த ஒரு மலைப் பிரதேசமாகும். அக்காலத்தில் வாகன வசதி என்பது அரிதனதாகவும் வசதிக் குறைவானதாகவும் இருந்தது. எனவே சில நேரங்களில் ஹஸ்ரத் அஹ்மது(அலை) அவர்கள் கால் நடையாகவே டல்ஹவுஸி வரை செல்ல வேண்டியிருந்தது. இந்தப் பயணங்கள் மிகுந்த கஷ்டமும், வசதிக் குறைவும் உடையனவாக இருந்தன. அரசாங்கச் சலுகைகளைப் பெறுவதற்காக அவர்கள் இந்தப் பயணங்களை மேற்கொள்ளவில்லை. மாறாக நீதிமன்றங்கள் பிறப்பித்த சம்மன்களுக்கு பதில் சொல்வதற்காகவே இத்தகைய பயணங்களை மேற்கொண்டார்கள். இந்தப் பயணங்களிலும் சில நன்மைகள் இருக்கத்தான் செய்தன. இந்தப் பயணங்களின் மூலம் அவர்களுக்கு வெளியுலகத் தொடர்பு ஏற்பட்டது. அது மட்டுமல்ல; தெளிந்த நீரோடைகள் பாயும்

அந்த மலைப்பகுதியின் கம்பீரமும் எல்லையற்ற இயற்கையழகும் அவர்களின் தூய உள்ளத்தை இறைவனின் அழகு, மகத்துவம் ஆகியவற்றால் நிறைத்தன, மலைப்பகுதிகளில் காணப்பட்ட தனிமை அவர்களை வெகுவாக கவர்ந்தது. அந்நேரங்களில் அவர்கள் தம்மை இறைவனின் அருகில் இருப்பதாக உணர்ந்தார்கள். குத்தகைதாரர்களோடு ஏற்பட்ட தொடர்ச்சியான பல வழக்குகளை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. வழக்கு என்று வந்து விட்டால், மக்கள் பொதுவாக உண்மை, நேர்மை, நாணயம் ஆகியவற்றைப் பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. ஆனால் தம் தந்தையின் விருப்பத்திற்கேற்ப உண்மையோடு வழக்குகளை நடத்தி வந்த அதே நேரத்தில், தாம் முழு இதயத்தோடும், ஆன்மாவோடும் நேசித்த தம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் அவர்கள் செய்யத் தவறவில்லை. அவர்கள் தம் விருப்பப்படி செயல்பட முடிந்திருந்தால், உலகியல் ரீதியான கோரிக்கைகள் அனைத்தையும் விட்டு விட்டு முழுமையான இறை பணிக்குத் தம்மை அர்ப்பணித்திருப் பார்கள். ஆனால் உலக மக்களோடு தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் பிற்காலத்தில் அவர்களுக்குத் தேவையான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது இறை விருப்பமாக இருந்தது. பிற்காலத்தில் தாம் சீர்திருத்தி புத்துயிர் வழங்க வேண்டியதிருந்த உலகில் காணப்பட்ட பேராசை, ஏமாற்று, மோகம், கொடிய தன்மை, உலோபித்தனம் ஆகியவற்றை அவர்கள் தம் கண்களால் காண நேர்ந்தது. எந்த அளவுக்கு இந்த உலகை அவர்கள் நெருங்கிப் பார்த்தார்களோ, அந்த அளவுக்கு அதன் மேல் அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. எனவே அவர்கள் தம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய உண்மையான கடமைகளைச் செய்ய ஒரு போதும் தவறியதில்லை. எவ்வளவு களைப்போடு இருந்தாலும், எவ்வளவு அதிகமான வேலைப் பளுவிற்கு மத்தியில் இருந்தாலும், தொழுகை நேரங்களில் இறைவனோடு ஏற்படும் உறவை அவர்கள் ஒரு நாளும் தவறவிட்டதில்லை.

நீதி மன்றங்களில் வழக்குத் தொடுக்கும் கட்சிக்காரர்களை அவர்களின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தில் நீதிமன்றப் பணியாளர் உரத்த குரலில் கூவி அழைப்பார். அவ்வாறு தம் பெயர் கூறி அழைக்கப்படும்வரை கட்சிக்காரர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியது வரும். ஒரு வழக்கை விசாரிப்பதற்குக் குறிப்பிட்ட நேரம் எதுவும் முன்னரே குறிப்பிடப்படாது. எனவே பல நேரங்களில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பெயர் கூறி அழைக்கப்பட்ட பொழுது அவர்கள் தொழுது கொண்டிருக்க நேர்ந்தது. பல நேரங்களில் அவர்கள் தொழுது முடித்து நீதி மன்றத்தில் ஆஜராவதற்கு முன் வழக்கு விசாரிக்கப்பட்டு, விசாரணை முடிவு அவர்களுக்குச் சாதகமாக அமைந்ததுமுண்டு.

ஒருமுறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு முக்கியமான வழக்கு விசாரணைக்காக லாஹூர் சென்றார்கள். காதியானைச் சேர்ந்த செய்யது முஹம்மது அலி ஷா என்பவர் வனத்துறையில் பணிபுரிந்து வந்தார். அவர் லாஹூரில் தங்கியிருந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் இருக்கும் பொழுது, அவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து பணியாள் ஒருவர் அவர்களுக்கு உணவு எடுத்துச் செல்வது வழக்கம். அவ்வாறு ஒருநாள் எடுத்து வந்த பணியாளரிடம், உணவைத் திரும்ப எடுத்துச் செல்லும் படியும், தாம் வீட்டில் வந்து உணவருந்திக் கொள்வதாகவும் கூறி அனுப்பினார்கள். சிறிது நேரம் கழித்து முகமலர்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் அவர்கள் வீடு திரும்பினார்கள். வழக்கில் வெற்றி பெற்று விட்டீர்களா என வினவியபோது, ‘இல்லை, வழக்கு தோற்றுவிட்டது’ என்று பதிலளித்தார்கள். முக்கியமான வழக்கில் தோல்வி ஏற்படும் பொழுது, மக்கள் அதிர்ச்சியும் வருத்தமும் அடைவார்கள், இந்த

வழக்கின் முடிவோ ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையாருக்கு மிகுந்த ஏமாற்றாத்தை அளிப்பதாகவும், அவர்களின் குடும்பத்திற்கு பேரிழப்பாகவும் அமைந்தது. இது போன்ற சந்தர்ப்பங்களில் வருத்தப்படுவதோ, வேதனைப்படுவதோ எந்தப் பலனையும் அளிக்கப் போவதில்லை. தாம் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமையைச் சரிவரச் செய்து விட்டோம் என்பதாலும், இனிமேல் தாம் தம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கு அதிக நேரம் ஒதுக்க முடியும். என்பதாலும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இதன் பிறகு, மிர்ஸா குலாம் முர்தஸா தம் மகனுக்கு ஒரு அரசாங்க வேலையைப் பெற்றுக் கொடுக்க முயற்சி மேற்கொண்டார். 1863 ஆம் ஆண்டு ஸியால்கோட்டிலுள்ள நீதிமன்றத்தில் குமாஸ்தவாகப் பணி நியமனம் பெற்றுத் தந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு இந்த வேலையில் அதிக விருப்பம் இல்லாவிட்டாலும் உலக அனுபவம் பெறுவதற்கு அது அவசியமாக இருந்தது.

ஸியால் கோட் நீதி மன்றத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பல ஆண்டுகள் அனைவரின் திருப்தியையும் பெறக்கூடிய விதத்தில் பணியாற்றினார்கள்.

ஒருமுறை முஹம்மது சாலிஹ் என்ற அரேபியர் ஸியால்கோட் நகரத்திற்கு வந்தார். அவர் ஒரு ஒற்றராக இருப்பாரோ என்று அதிகாரிகள் சந்தேகித்தனர். மாவட்ட நீதிமன்ற நீதிபதி அவரை விசாரணைக்கு அழைத்திருந்தார். அவருக்கோ அரபி மட்டுமே தெரியும். எனவே அந்த விசாரணைக்கு மொழிபெயர்ப்பாளராக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அன்னார் அந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்தார்கள்.

அக்காலத்தில் நீதிமன்றத்தில் பணிபுரிந்த குமாஸ்தாக்களுக்கும் பிற ஊழியர்களுக்கும் ஆங்கில மொழியின் அடிப்படை விஷயங்களைப் போதிப்பதற்காக ஸியால் கோட்டில் மாலை நேர வகுப்புக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களும் இந்த வகுப்பில் சேர்ந்து, ஓரிரு ஆரம்பப் பாடங்களைப் பயின்றார்கள் என்று கூறப்படுகிறது. அதன் மூலம் ஆங்கில எழுத்துக்களையும், சில எளிய வார்த்தைகளையும் மட்டுமே அவர்கள் கற்றுக்கொண்டார்கள். ஆனால் அந்த வகுப்புக்குச் செல்வதையும் அவர்கள் நிறுத்திக் கொண்டதால், சிறிது காலத்தில் தாம் அங்கு கற்றவற்றையும் மறந்து விட்டார்கள்.

ஸியால்கோட்டில் இருந்த பொழுது,ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குச் சில கிறித்தவப் பிரச்சாரகர்களோடு தொடர்பு ஏற்பட்டது. அவர்களோடு அன்னார் பல விவாதங்கள் நடத்தினார்கள். ஒரு முறை தெற்கு ஹாஜிபுரா என்ற பகுதியைச் சேர்ந்த கிறித்தவப் பிரச்சாரகரான எலிஷா என்பவரோடு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விவாதம் செய்தார்கள். கிறித்தவமதத்தைப் பின்பற்றாமல் ஒரு மனிதன் இரட்சிப்படையவே முடியாது என அந்த பிரச்சாரகர் கூறினார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரிடம், 'இரட்சிப்பு' என்றால் என்னவென்றும், அதை அவர் எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார் என்று விளக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள். அந்தப் பிரச்சாரகரால் அதை விளக்க முடியவில்லை. தாம் தர்க்க சாஸ்திரம் படிக்கவில்லை என்று கூறி விவாதத்தை முடித்துக் கொண்டார்.

ரெவரெண்ட் பட்லர் M.A. என்பவர் ஒரு கற்றறிந்த கிறித்தவப் பிரச்சாரகர். இவர் கோஹட்பூர் என்ற கிராமத்திற்குப் பக்கத்தில் வசித்து வந்தார். அவருக்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குமிடையில் பல விவாதங்கள் நடைபெற்றன. ஒரு முறை அவர் ஆதம் (அலை) அவர்கள் செய்த பாவத்தின் சாயல் படியக் கூடாது என்பதற்காகவே இயேசு ஒரு கன்னியின் வயிற்றில் தோன்றினார் என்று கூறினார். இதற்கு பதிலளிக்கும் போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், 'வழிவழியாக

வந்த பாவம் என்ற ஒன்று இருக்குமானால் அதை இயேசு நாதர் ஏற்கனவே பெற்றுவிட்டார். ஏனென்றால் ஆதமை பாவம் செய்யத் தூண்டி சொர்க்கத்திலிருந்து வெளியேறச் செய்ததே ஏவாள் தான். கிறித்தவர்களின் நம்பிக்கைப்படி இயேசு பாவத்தின் சாயலே இல்லாமல் பிறக்க வேண்டுமானால், அவர் தாயுமின்றிப் பிறந்திருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவருக்குப் பதில் கூறினார்கள். அந்தப் பிரச்சாரகரால் அதற்குப் பதில் எதுவும் கூற முடியவில்லை.

திரு பட்லர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மிகவும் நேசித்தார். அன்னாரோடு மிகுந்த மரியாதையோடும், கண்ணியத்தோடும் பழகினார். திரு பட்லர் தமது வீட்டிற்குப் போகும் வழியில் நீதிமன்றத்திற்குச் செல்வார். அங்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது சக ஊழியர்களோடு தரையில் விரிக்கப் பட்ட பாயின் மீது அமர்ந்திருப்பார்கள். திரு பட்லர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்து உரையாடிய பின் விடைபெற்றுச் செல்வார்.

ஜலந்தரைச் சேர்ந்தவரும், மவஹ்றத் என்ற புனை பெயரில் கவிதை எழுதி வந்தவருமான மிர்ஸா முராது பேக் என்பவர் ஒருமுறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம், அலிகாரைச் சேர்ந்த செய்யது அஹ்மது கான் என்பவர் பைபிளுக்கு ஒரு விளக்கவுரை எழுதியிருப்பதாகவும், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அதற்குப் பதில் எழுதினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் கேட்டுக் கொண்டார். எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சர் செய்யது அஹ்மது கானுக்கு அரபியில் பதில் எழுதினார்கள். சர் செய்யது அஹ்மது கான் திருக்குர்ஆனுக்கு எழுதிய விரிவுரையை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் படிக்க நேர்ந்தது. அந்த விரிவுரை அவர்களுக்கு பிடிக்கவில்லை. அறிவுக்கும், அறிவியலுக்கும் பொருத்தமில்லாத சில கொள்கைகளை இஸ்லாம் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு மனப்பான்மையை சர் செய்யது அஹ்மது கான் கொண்டிருப்பதாக அன்னார் கருதினார்கள்.

அவர்கள் ஸியால்கோட்டில் இருந்த காலத்தில் அவர்களுடைய நண்பர்கள் என்றும் அவர்களோடு பழகியவர்கள் என்றும் கூறப்படுபவர்களில் கீழ்க்கண்டவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்:

நீதிமன்ற முன்ஷி ஷேக் அல்லாத், சிறு கடை நடத்தி வந்த சவுத்ரி ஃபஸல் தீன், நக்ஷபந்தி பிரிவைச் சேர்ந்த பயபக்தியுள்ள மார்க்கப் பெரியவரான மவ்லவி மஹ்பூப் ஆலம், மிஷன் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த நஸ்ருல்லாஹ், மனுக்கள் தயாரித்துக் கொடுக்கும் பணி செய்து வந்த ஹக்கீம் மன்ஸப் அலி, மருத்துவரான ஹக்கீம் ஹுஸாமுத்தீன் ஆகியோர். அதில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் ஓரிரு நூல்களைக் கற்றவர். பின்னாளில் அவர் அன்னாரின் முக்கிய சீடர்களில் ஒருவரானார். பட்டாலாவில் அடிக்கடி சந்தித்த வழக்குரைஞரான L. பீம் செயின் என்பவரும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் நண்பராக இருந்தார். அவர் ஒரு கற்றறிந்த மேதையாகவும் பாரசீக மொழியில் புலமை வாய்ந்தவராகவும் விளங்கினார். எனவே அவர்கள் இருவருக்கும் இடையே ஓர் இயல்பான ஈர்ப்பு இருந்தது.

(தொடரும்)

**தமிழில்:**
**S.S.H. முஹம்மது லெப்பை**

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

தொடர்: 6

## *சிறுவர் பகுதி*

# ஹதீஸ்

**கேள்வி 50 :** ஹதீஸ் என்றால் என்ன?

**பதில் :** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொற்கள், நடைமுறைகள் மற்றும் நிகழ்வுகளின் தொடர்பாக அறிவிக்கப்பட்ட சொல் அளவிலான அறிவிப்புகளுக்கு பெயர்தான் ஹதீஸ் ஆகும்.

**கேள்வி 51 :** ஸிஹா சித்தா தொடர்பாக சுருக்கமாக கூறவும்.

**பதில் :** ஹதீஸ்களின் நம்பிக்கையான நிலைமைக்கேற்றவாறு முஹத்திஸ்களின் (ஹதீஸ் விரிவுரையாளர்கள்) கீழ் வரும் ஹதீஸ் புத்தகங்களை மற்ற ஹதீஸ் புத்தகங்களை விட தகுதிச் சான்று பெற்றவையாகவும், நம்பகமானவையாகவும் கூறியுள்ளார்கள். இந்த ஆறு நூல்களைத்தான் ஸிஹாஹ் சித்தா (மிகச் சரியான ஆறு நூல்கள்) எனகூறுவார்கள்.

அவற்றின் தர வரிசை கீழ் வருமாறு கருதப்படுகிறது:

**(1) சஹீஹ் புகாரி:** தொகுப்பாளர்-ஹஸ்ரத் இமாம் முஹம்மது பின் இஸ்மாயீல் புகாரி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள். (ஹிஜ்ரி 194 முதல் ஹிஜ்ரி 256 வரை)

**(2) சஹீஹ் முஸ்லிம்:** தொகுப்பாளர்-ஹஸ்ரத் முஸ்லிம் பின் ஹஜாஜ் (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள். (ஹிஜ்ரி 209 முதல் ஹிஜ்ரி 261 வரை)

**(3)ஜாமிவுத் திர்மிஸி:** தொகுப்பாளர்-ஹஸ்ரத் இமாம் அபூ ஈசா முஹம்மது பின் ஈஸா திர்மிஸி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள். (ஹிஜ்ரி 204 முதல் ஹிஜ்ரி 279 வரை)

**(4)அபூ தாவூது:** தொகுப்பாளர்-ஹஸ்ரத் இமாம் அபூ தாவூது சுலைமான் பின் அஷ் அஸ் (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள். (ஹிஜ்ரி 202 முதல் ஹிஜ்ரி 275 வரை)

**(5) சுனன்நஸாயி :** தொகுப்பாளர்-ஹஸ்ரத் இமாம் ஹாஃபிழ் அஹ்மது பின் ஷுஐபுன்னஸாயி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள். (ஹிஜ்ரி 215 முதல் ஹிஜ்ரி 306 வரை)

**(6) இப்னு மாஜா :** தொகுப்பாளர்-ஹஸ்ரத் இமாம் அபூ அப்தில்லாஹ் முஹம்மது பின் யஸீதிப்னி மாஜா கஸ்வேனி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள். (ஹிஜ்ரி 209 முதல் ஹிஜ்ரி 275 வரை)

**கேள்வி 52 :** எந்த சஹாபி (நபித்தோழர்) மற்றும் , எந்த சஹாபிய்யா (நபித்தோழியர்) களிடமிருந்து அதிகமாக ஹதீஸ்கள் (நபி மொழிகள்) அறிவிக்கப்பட்டுள்ளன ?

**பதில் :** நபித்தோழர்களில் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்தும் , நபித்தோழியரில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்தும் அதிகமாக ஹதீஸ்கள் (நபிமொழிகள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

**கேள்வி 53 :** முஹம்மதிய உம்மத்தில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித் (மார்க்கத்தை புதுப்பிப்பவர்) தோன்றுவார் என்ற முன்னறிவிப்பு அடங்கிய ஒரு ஹதீஸை கூறவும்.

**பதில் :** இன்னல்லாஹ யப்அஸு லிஹாஸிஹில் உம்மத்தி அலா ரஃஸி குல்லி மிஅதி ஸனதி(ன்)ம் மய்யுஜத்திது லஹா தீனஹா. (அபூதாவூது தொகுதி 2 கிதாபுல் மலாஹிம் பக்கம் : 241)

**பொருள் :** அல்லாஹ் இந்த உம்மத்தில் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அவனுடைய மார்க்கத்தை மீண்டும் புதிதாக உயிரூட்டுவதற்காக ஒருவரை அனுப்புவான்.

**கேள்வி 54 :** நுபுவ்வத் தொடரும் என்பதற்கு சான்றாக உள்ள ஹதீஸை கூறவும்.

**பதில் :** லவ் ஆஷலகான சித்தீக்கன் நபிய்யன்.(இப்னு மாஜா தொகுதி 1 கிதாபுல் ஜனாயிஸ்.)

**பொருள் :** (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகன் இப்ராஹீமாகிய) அவர் உயிருடன் இருந்தால் கண்டிப்பாக அவர் உண்மையான நபியாக இருந்திருப்பார்.

**கேள்வி 55 :** ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எத்தனை வயது வரை உயிர் வாழ்ந்ததாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்?

**பதில் :** இன்ன ஈஸப்ன மர்யம ஆஷ இஷ்ரீன வமிஅத ஸனத்தின். (கன்ஸுல் உம்மால் தொகுதி 2 பக்கம் 160)

**பொருள் :** நிச்சயமாக ஹஸ்ரத் ஈஸப்னு மர்யம் 120 ஆண்டுகள் உயிருடன் வாழ்ந்தார்கள்.

**கேள்வி 56 :** மூஸா (அலை) அவர்களின் உம்மத்தில் தோன்றிய மஸீஹ் மற்றும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தில் தோன்றக் கூடிய மஸீஹ் ஆகிய இருவர்களின் தோற்றத்தைப் பற்றி கூறப்பட்டுள்ள ஹதீஸை கூறவும்.

**பதில் :** மூஸா (அலை) அவர்களின் உம்மத்தில் தோன்றிய மஸீஹ் அதாவது ஈஸா (அலை) அவர்களின் நிறம் சிவப்பு, சுருண்ட முடி, படர்ந்த மார்பு உடையவர் எனவும் முஹம்மதிய்ய மஸீஹ் கோதுமை நிறம், அழகானவர், அவர்களுடைய முடி நேராகவும் நீண்டதாகவும் இருப்பதாக ஹதீஸில் வந்துள்ளது. (ஸஹீஹ் புகாரி தொகுதி 2, கிதாப் பதவுல் கல்க் பக்கம் 165 எகிப்து வெளியீடு)

**கேள்வி 57 :** மஸீஹ் மற்றும் மஹ்தி இருவரும் ஒருவரே என்பதை குறிப்பிடும் ஹதீஸை கூறவும்.

**பதில் :** லல் மஹ்திய்யு இல்லா ஈஸா. (இப்னு. மாஜா கிதாபுல் ஃபிதன். பாப் ஷித்ததுஸ் ஸமான்)

**பொருள் :** மஹ்தி மற்றும் ஈஸா இருவரும் ஒருவரே.

**கேள்வி 58 :** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஹ்தி (அலை) அவர்களுக்கு ஸலாத்தை எட்ட வைக்குமாறு கூறிய ஹதீஸை கூறவும்.

**பதில் :** அலா மன் அத்தரகஹூ ஃபல் யக்ரஃ அலைஹிஸ்ஸலாம். (திப்ரானி அல் அவ்ஸத்து வஸ்ஸகீர்)

**பொருள் :** நினைவில் கொள்ளுங்கள், எவரெல்லாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திக்கும் பாக்கியத்தைப் பெறுவாரோ அவர் என்னுடைய சலாத்தை அவர்களுக்கு கண்டிப்பாக எட்ட வைக்கவும்.

**கேள்வி 59 :** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை பாரசீக வம்சத்தை சார்ந்தவர்கள் தான் என்று குறிப்பிடுகிற ஹதீஸை கூறவும்.

**பதில் :** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாரசீகத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்களின் தோளின் மேல் கை வைத்து இவ்வாறு கூறினார்கள் : லப் கானல் ஈமானு முஅல்லகன் பிஸ்ஸுரய்யா லனாலஹூ ரஜுலு(ன்)ம் மின் ஹாவுலாயி (புகாரி கிதாபுத் தஃப்ஸீர் பாகம் 3)

**பொருள் :** ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் இந்த பாரசீக வம்சத்திலிருந்து ஒருவர் அதை திரும்பவும் கொண்டு வருவார்.

**கேள்வி 60 :** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எந்தெந்த பணிகள் தொடர்பாக ஹதீஸில் வந்துள்ளது?

**பதில் :** சிலுவை (கொள்கைகளை) யை முறிப்பார், பன்றி (இயல்புகளை) யை கொல்லுவார், தஜ்ஜாலை கொல்லுவார், இஸ்லாத்தை வெற்றி பெறச் செய்வார். இஸ்லாமிய மார்க்கத்தை உயிர்ப்பிப்பார், ஷரீஅத்தை நிலை நாட்டுவார், உட்புற மற்றும் வெளிப்புற பிளவுக்கு நீதிமானாகவும், தீர்ப்பு

கூறுபவராகவும் விளங்குவார். இவ்வுலகத்தி லிருந்து தொலைந்து போன ஈமானை திரும்ப கொண்டு வருவார், அதிகமான (ஆன் மீக) செல்வத்தை கொடுப்பார் என ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

**கேள்வி 61 :** பள்ளிவாயிலில் நுழையும் போதும், வெளியேரும் போதும் என்ன துஆ ஓத வேண்டும் ?

**பதில் :** பள்ளிவாயிலில் நுழையும் போது செய்யும் துஆ: பிஸ்மில்லாஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ். அல்லாஹூம் மக்ஃபிர்லீ ஸுனூபீ. வஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக.

**பொருள் :** அல்லாஹ்வின் பெயரால் நுழைகின்றேன். அல்லாஹ்வின் தூதர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. அல்லாஹ்வே ! என் பாவங்களை மன்னிப்பாயாக. மேலும் உன் கருணையின் வாசல்களை எனக்காக திறப்பாயாக.

பள்ளிவாயிலிலிருந்து வெளியேறும் போது செய்யும் துஆ: பிஸ்மில்லாஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ். அல்லாஹூம் மக்ஃபிர்லீ ஸுனூபீ. வஃப்தஹ்லீ அப்வாப ஃபழ்லிக.

**பொருள் :** அல்லாஹ்வின் பெயரால் நுழைகின்றேன். அல்லாஹ்வின் தூதர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. அல்லாஹ்வே! என் பாவங்களை மன்னிப்பாயாக மேலும் உன் அருளின் வாசல்களை எனக்காக திறப்பாயாக.

**கேள்வி 62 :** ஃபிக்காஹ் (மார்க்கச் சட்டம்) தொடர்பான நான்கு மூல அடிப்படையை கூறுக.

**பதில் :** 1) திருக்குர்ஆன் 2) சுன்னத் மற்றும் ஹதீஸ் 3) இஜ்மாஃ (முஸ்லிம் அறிஞர்களின் ஒருமித்த கருத்து) 4) கியாஸ் (அனுமானம்)

**கேள்வி 63 :** சுன்னத் என்றால் என்ன?

**பதில் :** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல்முறையை, நடைமுறை யைத்தான் சுன்னத் என்று கூறுவர்.

தமிழில் :

**அபூ காஷிஃப்**

## கிறித்தவ பாதிரிகளின் பார்வையில் காதியான்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு முறை மூன்று கிறித்தவ பாதிரிகள் காதியான் வந்தார்கள். அவர்களில் ஒருவர் மிஸ்டர் லோகஸ், பிரின்ஸிபால் போர்மேன் கிறித்தவ கல்லூரி லாஹூர். இன்னொருவர் ஹோம் செக்ரட்டரி ஆஃப் எம். சி. மற்றொருவர் மிஸ்டர் வால்டர். அவர் கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி நான் ஒரு நூல் எழுதுவதற்காக விஷயங்களை சேகரிக்க அமெரிக்காவிலிருந்து வந்துள்ளேன்.

அவர்கள் அமெரிக்காவுக்கு திரும்பிய பிறகு மிஸ்டர் லோகஸ் சிலோனில் பாதிரிகளின் கூட்டத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில் கூறினார்: இஸ்லாத்தின் மீது கிறித்தவத்தை வெற்றி பெறச் செய்ய விரும்புகிறீர்கள் என்றால் இந்தியாவிலுள்ள காதியான் என்ற சிற்றூரின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அங்கு கிறித்தவத்துக்கு எதிராக வலுவான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. நீங்கள் அதனை செய்யாதவரை கிறித்தவ வெற்றிக்கு சரியான வழியை தேர்ந்தெடுத்தவர்களாக மாட்டீர்கள். அவ்வூரில் உருவாகும் திட்டங்களால் கிறித்தவம் சின்னாபின்னமாகிவிடும். அது என்ன ஏற்பாடு? அது இஸ்லாத்தின் ஒவ்வோரு விஷயத்தையும், விஷயங்களின் ஞானத்தையும் வெளியில் கொண்டு வருதல் என்ற ஏற்பாடுதான்.

**M. மன்சூர் அஹ்மது**

தொடர்: 4

# குறிக்கோளின் விளக்கம்

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

எந்த சிறப்புத் தன்மையில், ஆன்மீக ஆற்றலில் இந்த எளியவனும் மர்யமின் மகன் மஸீஹும் ஒப்புமை உடையவர்களாக இருக்கின்றோம்? அந்த ஒப்புமை என்ன? என்ற கேள்வி எழுமாயின், அதற்குரிய பதில், அது எங்கள் இருவரின் ஆன்மீக ஆற்றலில் ஒரு குறிப்பிட்ட முறையில் வைக்கப்பட்டுள்ள ஓர் ஒட்டு மொத்தமான சிறப்புத்தன்மையாகும். அதன் ஒரு பக்கம் கீழேயும், இன்னொரு பக்கம் மேலேயும் செல்கின்றது.

கீழே செல்கின்றது என்பதன் கருத்து, அல்லாஹ்வின் படைப்பினங்களுக்காக இருக்கும் உயர்தரமான உருக்கமும் கவலையுமாகும். அது அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவருக்கும் அதற்காக ஆயத்தமாக இருக்கும் சீடர்களுக்கும் மத்தியில் ஒரு உறுதியான தொடர்பையும், உறவையும் வழங்கி, அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவரின் தூய உள்ளத்தில் காணப்படும் ஒளிமிக்க ஆற்றலை எல்லா பசுமையான கிளைகளிலும் பரப்புகின்றது.

மேலே செல்கின்றது என்பதன் கருத்து, அந்த உயர்தரமான அன்பு, உறுதியான ஈமானுடன் கலந்திருக்கின்றது. அது முதலில் இறை நாட்டத்தினால் அடியாரின் உள்ளத்தில் உருவாகி, ஆற்றல் மிக்க இறைவனின் நேசத்தை தன்பக்கம் ஈர்க்கின்றது. பின்னர் உண்மையில் ஆண், பெண் என்ற நிலையில் இருக்கும் அவ்விரு நேசங்களும் ஒன்றிணைவதால் படைப்பாளனுக்கும், படைப்பினங்களுக்குமிடையே ஓர் உறுதியான உறவும், ஒரு வலுவான தொடர்பும் உருவாகி இறை நேசம் எனும் பிரகாசிக்கும் நெருப்பினால், படைப்பினத்தின் நேசத்தை எரிகின்ற விறகுக் கட்டையைப் போன்று பற்றிக் கொள்கின்றது. அதனால் ஒரு மூன்றாம் பொருள் உருவாகின்றது. அதற்குத்தான் ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆவி) என்று பெயர். (திருக்குர்ஆன் 16:103 காண்க). எனவே இறைவன் தனது சிறப்பான நாட்டத்தினால் அதனிடம் இவ்வகையான நேசத்தை உருவாக்கிவிடும் நேரத்திலிருந்தே மனிதனின் இந்த படித்தரத்தைக் கொண்ட ஆன்மீக பிறப்பு உருவாகுவதாகக் கருதப்படுகின்றது. இத்தகைய அந்தஸ்தையும், தகுதியையும் கொண்ட நேசத்தின்போது, இறை நேசத்தினால் நிரம்பிய ஆன்மா, இறை நாட்டத்தினால் தற்போது நேசத்தால் நிரம்பிவிட்ட மனித ஆன்மாவிற்கு ஒரு புதிய பிறப்பை வழங்குகின்றது என உவமையாகக் கூறுவது பொருத்தமானதேயாகும். இதன் காரணமாகத்தான், நேசத்தால் நிரம்பி காணப்படும் இந்த ஆவிக்கு நேசத்தை ஊதுகின்ற இறைவனின் ஆவியுடன் உருவகமாக மகனைப் போன்ற ஒரு தொடர்பு இருக்கின்றது. இவ்விரண்டும் இணைவதால் மனிதனின் உள்ளத்தில் ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆவி) உருவாகிறது. எனவே அது அவ்விரண்டிற்கும் மகனைப் போன்றாகும் எனக் கூறலாம். மேலும் இந்த அந்தஸ்தைக் கொண்ட நேசத்திற்கு அவசியமான தூய திரித்துவம் என்பது இதுதான். இதனைத்தான் அசுத்தமான இயல்பைக் கொண்டவர்கள் ஷிர்க்கான முறையில் கருதி விட்டனர். மேலும் தானே அழிந்து போய்விடுவதற்கும், ஒன்றுமில்லாமற் போய்விடுவதற்கும் சாத்தியக்கூறாக இருக்கும் ஒன்றை, சுயமே என்றென்றும் நிலைத்திருக்கும் இறைவனுக்கு இணையாக்கி விட்டனர்.

ஆனால் இந்தத் தகுதி இந்த எளியவனுக்கும் (ஈஸா) மஸீஹிக்கும் இருக்கிறது என ஒப்புக்கொண்டால், பிறகு நம் தலைவரும், ஏஜமானரும் இறை தூதர்களில் சிறந்தவரும், நபிமார்களில் முத்திரையுமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு என்ன அந்தஸ்து

எஞ்சியிருகிறது என்ற கேள்வி இங்கு எழுப்பப்படுமாயின் தெரிந்து கொள்ளுங்கள்: அது ஒரு மிக உயர்ந்த அந்தஸ்தும் , மிக மேலான தகுதியுமாகும். அது எல்லா பண்புகளையும் முழுமையான முறையில் ஒருங்கே கொண்டிருப்பவருடன் முடிவடைந்து விட்டது. அதன் நிலைமையை கண்டு கொள்வது கூட பிறரால் முடியாது. அப்படியிருக்கும் போது அ (ந்த அந்தஸ்) து பிறருக்கு கிடைக்க முடியும் என்பது எம்மாத்திரம்?

(தொடர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாரசீக மொழியில் கவிதை வடித்துள்ளார்கள். அதன் பொருள்:)

அஹ்மது (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தை கண்ணியமிக்க இறைவனைத் தவிர வேறு யார் அறிவார்? அவர் தன்னை விட்டே தனித்து விட்டார். ஏனெனில் அதற்கு மத்தியில் 'மீம்' என்ற எழுத்து வந்து விட்டது.

(அதாவது இறைவனின் பண்புப் பெயராகிய அஹது என்பதற்கும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பண்புப் பெயராகிய அஹ்மது என்பதற்கும் இடையில் 'மீம்' என்ற ஒரு சொல்தான் உள்ளது.)

இந்த வகையில் அவர் உள்ளத்தைக் கவர்ந்த இறைவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்டார். மேலும் அவர் முழுமையாக ஐக்கியப்பட்டு போனதன் காரணத்தினால் மேன்மேலும் கருணை காட்டும் இறைவனின் பண்புகளை அவரது உடல் முழுக்க முழுக்க மேற்கொண்டது.

அந்த தூய முகத்திலிருந்து உண்மையான அன்பிற்குரியவனின் நறுமணம் வீசத் தொடங்கியது. மேலும் அவரது உண்மையான பண்புகள், தொன்மையான இறைவனின் தோற்றமாக விளங்குகின்றது.

அந்த அஹ்மது (ஸல்) அவர்களின் உள்ளத்தைத் தவிர எந்த மகத்தான அர்ஷையும் நான் காணவில்லை. இவ்வாறு கூறுவதால் எவராவது என்னைப் பற்றி மார்க்கமிழந்தவர், வழிகேடர் என்று கூறினாலும் பரவாயில்லை.

இறைவனின் அருளால் நான் காலத்தின் சிந்தனைகளுக்கு நேர்மாற்றமாக இறை அருள்கள் என்ற நீரூற்றின் மீது கொண்ட ஆர்வத்தினால் நூற்றுக்கணக்கான துன்பங்களையும் விலை கொடுத்து வாங்க ஆயத்தமாக இருகின்றேன்.

இறைவனின் அருட்கொடைகள் மற்றும் பேரருளால் அந்த கலீம் (ஸல்) அவர்களின் மீது கொண்ட பேரன்பினால் ஃபிர் அவ்னிய இயல்பு கொண்ட மக்களுக்கு நான் எதிரியாவேன்.

வழியில் செல்பவர் எவரையாவது நான் கண்டால் எனக்கு தென்பட்டுள்ள அன்னார் (ஸல்) அவர்களின் சிறப்பான அந்தஸ்தையும், தகுதியையும் நான் எடுத்துரைப்பேன்.

முஹம்மது (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் வழியில் எனது தலையும், உயிரும் அர்ப்பணமாகட்டுமாக. இதுவே எனது அவாவும், துஆவும், எனது மனதின் உறுதியான எண்ணமும் ஆகும்.

இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தைப் புரிந்து கொள்வதற்கு இவ்வாறு எழுதுவது போதுமானதாகும். நெருக்கம், அன்பு ஆகியவற்றின் தகுதிகள் தமது ஆன்மீகப் படித்தரங்களைப் பொருத்தவரை மூன்று வகைப்படும். எல்லாவற்றையும் விட மிகக் குறைந்த படித்தரம் - அதுவும் உண்மையில் மிகப் பெரிய படித்தரமேயாகும் - அது, இறை நேசம் என்ற நெருப்பு மனிதனுடைய உள்ளம் எனும் தகட்டை சூடுபடுத்தலாம். அதன் மூலமாக நெருப்பின் சில வேலைகளும் நடக்கும் அளவுக்கு கூட சூடுபடுத்தலாம். ஆனால் தாக்கத்தைப் பெற்றுக் கொண்ட அதனிடத்தில் நெருப்பின் பிரகாசம் உருவாகாமல் இருக்கலாம். இந்த படித்தரத்தைக் கொண்ட அன்பில் இறையன்பு என்ற தீச்சுடர் படும் போது, அந்த தீச்சுடரினால் ஆன்மாவில் எந்த அளவுக்கு வெப்பம் உருவாகின்றதோ அ(ந்த வெப்பத்)தினை

அமைதி, நிம்மதி என்றும் இன்னும் சில நேரத்தில் வானவர் மலக் என்ற சொல்லி னாலும் வருணித்துக் கூறப்படுகின்றது.

அன்பின் இரண்டாம் படித்தரத்தை நாம் மேலே விளக்கியுள்ளோம். அதில் இரண்டு அன்புகளும் இணைவதால் இறையன்பு என்ற நெருப்பு மனிதனின் உள்ளம் என்னும் தகட்டை எந்த அளவுக்கு சூடுபடுத்துகிற தென்றால், அதில் நெருப்பு என்ற வடிவத்தில் ஓர் ஒளி உருவாகி விடுகிறது. ஆனால் அந்த ஒளியில் எந்த விதமான தீச்சுடரோ அல்லது கொளுந்துவிட்டு எரிதலோ இருப்பதில்லை. வெறும் ஓர் ஒளி இருக்கிறது. அது ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆவி) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

அன்பின் மூன்றாவது படித்தரத்தில், இறையன்பு எனும் மிகவும் எரிகின்ற ஒரு தீச்சுடர் மனித அன்பு எனும் ஆயத்தமான திரியின் மீது பட்டு அதனை எரியச் செய்கின்றது. மேலும் அதன் எல்லா நரம்புகளிலும் மிகைத்து நின்று அதனை தனது நிறைவான முழுமையான தோற்றமாக மாற்றி விடுகிறது. மேலும் இந்த நிலைமையில் இறையன்பு எனும் நெருப்பு மனிதனுடைய உள்ளத்திற்கு ஓர் ஒளியை வழங்குவது மட்டுமல்லாமல், உடனே அந்த ஒளியுடன் அது முழுவதுமாக கொளுந்துவிட்டு எரிகிறது. மேலும் அதன் தீச்சுடர்களும், ஜுவாலைகளும் சுற்றுப்புறங்களை பகல் வெளிச்சத்தைப் போன்று ஒளிமிக்கதாக ஆக்கிவிடுகின்றன. பிறகு எந்த விதமான இருளும் எஞ்சியிருப்பதில்லை. பின்னர் முழுமையாக வும், எல்லா முழுமையான பண்புகளுடனும் அது முழுவதும் நெருப்பாகவே ஆகிவிடு கின்றது.

எரிகின்ற ஒரு தீச்சுடர் என்ற வடிவில், இரண்டு அன்புகளும் இணைவதால் உருவாகும் இந்த நிலைமையை ரூஹுல் அமீன்[1] (நம்பிக்கைக்குரிய ஆவி) என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் இது எல்லா இருளிலிருந்தும் பாதுகாப்பை வழங்குகிறது. மேலும் எல்லா விதமான மாசுகளிலிருந்தும் விலகியிருக்கின்றது. மேலும் இதன் பெயர் ஷதீதுல் குவா[2] (பேராற்றலைக் கொண்டது) என்பதுமாகும். ஏனெனில் இது மிக உயர் தரமான ஆற்றலை கொண்ட வஹி ஆகும். இதை விட பெரிய பேராற்றலைக் கொண்ட வஹியை கற்பனை செய்து பார்க்க முடியாது. மேலும் இதன் பெயர் ஸுல் உஃபுகில் அஃலா என்பதுமாகும்.[3] ஏனெனில் இது வஹியின் (இறை அறிவிப்பின்) மிக உன்னத படித்தரத்தின் தோற்றமாகும். மேலும் இது ***ரஆ மா ரஆ*** என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.[4] ஏனெனில் இந்த நிலையை கணிப்பதென்பது, எல்லா படைப்பினங்களின் கற்பனை, சிந்தனை, யோசனை ஆகியவற்றை விட்டும் அப்பாற்பட்டதாகும்.

மேலும் இந்த நிலை உலகத்தில் ஒரே ஒரு மனிதருக்குத்தான் கிடைத்தது. (அதாவது ஹஸ்ரத் நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம்). அவருடன் மனிதத்துவத்தின் எல்லா தொடரும் முடிந்து விட்டது. மேலும் மனிதனுடைய தகுதிகளின் வட்டம் முழுமை தன்மையை எட்டி விட்டது. மேலும் உண்மையில் அது இறைவனுடைய படைப்பு எனும் ஒரு நீண்ட கோட்டின் உயர் பகுதியிலுள்ள கடைசி கட்டமாகும். அதுவே உயர்வின் எல்லா படித்தரங்களின் இறுதி எல்லையாகும். இறைவனுடைய ஞானம் எனும் கை அற்பத்திலும் அற்பமான படைப்பி லிருந்து, கீழினும் கீழான படைப்பிலிருந்து படைப்பின் தொடரை துவக்கி மிக உயர்ந்த படித்தரமான அந்த உச்ச நிலை வரை

1. திருக்குர்ஆன் 26:194 காண்க. இந்தச் சொல் வழக்கு முற்றிலுமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பொருந்துகிறது - மொழிபெயர்ப்பாளர்.

2. திருக்குர்ஆன் 53:6 காண்க - மொழிபெயர்ப்பாளர்.

3. அவர் மிகவும் உயரிய அடிவானத்தில் இருந்தார். திருக்குர்ஆன் 53:8 காண்க - மொழிபெயர்ப்பாளர்.

4. அவர் பார்க்க வேண்டியதையே பார்த்தார். திருக்குர்ஆன் 53:12ன் கருத்து- மொழிபெயர்ப்பாளர்.

சென்றடைய வைத்துவிட்டது. வேறொரு சொற்களில் சொல்லப்போனால், அவர் பெயர்தான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்பதாகும். அதன் பொருள், மிகவும் புகழப்பட்டவர் என்பதாகும். அதாவது, நிறைவு பெற்ற மேன்மைகளின் தோற்றமாக விளங்குபவர். எனவே, இயல்பாகவே அந்த நபிக்கு உயரிய, மேலான அந்தஸ்து இருந்ததைப் போன்றே வெளிப்படையாகவும் உயரிய, மேலான வஹி அவருக்கு வழங்கப்பட்டது. மேலும் அன்பின் மிக உயர்வான உன்னதமான, அந்தஸ்து (அந்த மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவருக்கு கிடைத்தது. இது எத்தகைய உயரிய, மேலான அந்தஸ்து என்றால், நானும், (ஈஸா) மஸீஹ் இருவரும் அந்த அந்தஸ்தை அடைய முடியாது. அதன் பெயர் ஒன்று சேரும் அந்தஸ்து மற்றும் இறைவனுடன் முழுமையாக ஒன்றிவிடும் அந்தஸ்து என்பதாகும்.

இந்த அத்தாட்சி, அடையாளத்தின் அடிப்படையிலேயே, முந்தைய நபிமார்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றி முன்னறிவித் திருக்கின்றார்கள். மேலும் அவர்கள் (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் இத்தகைய) அந்தஸ்தையே அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

(ஈஸா) மஸீஹ் மற்றும் இந்த எளியவன் ஆகிய இருவரின் அந்தஸ்து எத்தகையது என்றால், இதனை உருவகமாக மகன் என்ற சொல்லால் வருணித்துக் கூற முடியும். அவ்வாறே (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின்) அந்த அந்தஸ்தும் எத்தகைய மகத்தான, மிக உயரிய அந்தஸ்து என்றால், முந்தைய நபிமார்கள் இந்த அந்தஸ்தை கொண்டவரின் தோற்றத்தை உருவகமாக இறைவனின் தோற்றமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் வெளிப்படுத்து வதை இறைவனின் வெளிப்பாடாகவே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஹஸ்ரத் (ஈசா) மஸீஹ் ஓர் உதாரணத்தை எடுத்து வைத்து கூறியிருப்பதைப் போன்று அவருடைய வருகையை இறைவனுடைய வருகையாகவே வருணித்துக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

(ஈசா) மஸீஹ் கூறியிருப்பதாவது, திராட்சைப்பழத் தோட்டத்தின் பழங்களை வாங்கி வருவதற்காக முதலில் தோட்டத்தின் எஜமானன் (அதாவது இறைவன்) தனது ஊழியக்காரர்களை அனுப்பினான்.

அதாவது ஆரம்ப படித்தரத்தைக் கொண்ட (இறை) நெருக்கம் பெற்றவர்களை அனுப்பினான். இதன் கருத்து, ஹஸ்ரத் (ஈஸா) மஸீஹின் காலத்திலும், அந்த நூற்றாண்டிலேயே கொஞ்சம் அவர்களுக்கு முன்னர் வந்திருந்த நல்லவர்கள்.

(நல்லவர்களாகிய) அந்த ஊழியக்காரர்களை அனுப்பினான். தோட்டக்காரர்கள் தோட்டத்தின் பழங்களை கொடுக்க மறுத்தபோது தோட்டத்தின் எஜமானன் வலியுறுத்தியவாறு தனது மகனை அவர்களின் பக்கம் அனுப்பி வைத்தான். அவர்கள் அவரை மகன் எனக் கருதி தோட்டத்தின் பழத்தை அவரிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான்.

இவ்விடத்தில் மகன் என்பதன் கருத்து, இறையன்பின் இரண்டாம் படித்தரத்தை கொண்ட நெருக்கத்தைப் பெற்றிருக்கும் (ஈசா) மஸீஹ் ஆவார்.

ஆனால் தோட்டக் காரர்கள் அவருடைய மகனுக்கும் தோட்டத்தின் பழங்களை கொடுக்கவில்லை. மாறாக, தமது கருத்தின்படி அவரைக் கொன்றுவிட்டனர். இதற்குப் பிறகு (ஈசா) மஸீஹ் கூறுகிறார்: இப்போது தோட்டத்தின் எஜமானன் நேரடியாக வருவான். அதாவது தோட்டக்காரர்களைக் கொன்று தோட்டத்தை குறித்த காலத்தில் கனிகளைத் தருகின்ற மக்களிடம் கொடுப்பதற்காக இறைவன் நேரடியாக வருகை தருவான்.[1]

இந்த இடத்தில் இறைவன் வருவான் என்பதன் கருத்து இறைநெருக்கம், இறையன்பு என்பதன் மூன்றாவது படித்தரத்தை தன்னகத்தே தக்கவைத்துக் கொண்டுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

1 – மத்தேயு அதிகாரம் 21 வசனங்கள் 33 முதல் 41 வரை காண்க – மொழிபெயர்ப்பாளர்.

வருகையாகும்.[2] மேலும் இவையெல்லாம் ஆன்மீக படித்தரங்களாகும். அவை உருவகங்களாக பொருத்தமான சொற்களால் கூறப்பட்டுள்ளன. அவ்வாறல்லாமல், இவ்விடத்தில் உண்மையான மகன் என்ற கருத்து அல்ல; அல்லது உண்மையான இறைதன்மை என்ற கருத்திலும் அல்ல.

(தொடரும்)

**தமிழில்:**

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A**

---

2 - நமது தலைவரும், எஜமானருமாகிய காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களைப் பற்றி அவர்கள் உலகத்தில் வருவது, உண்மையில் இறைவன் வெளிப்படுவதாகும் என்று ஹஸ்ரத் (ஈசா) மஸீஹ் (அலை) அவர்கள் மட்டும் கூறவில்லை; மாறாக, இந்த வகையான கூற்றை பிற நபிமார்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி தத்தமது முன்னறிவிப்புகளில் குறிப்பிட்டிருகின்றனர். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருகையை இறைவனின் வருகையாகக் குறிப்பிட்டுள்ளனர். இன்னும் சொல்லப்போனால் இறைமையின் நிறைவான தோற்றமாக இருக்கின்ற காரணத்தினால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இறைவன் என்றே கூறியிருக்கின்றனர். தாவுதின் சங்கீதத்தில் இவ்வாறு வருகின்றது:

“எல்லா மனுபுத்திரரிலும் நீர் மிக்க அழகானவர். உமது உதடுகளில் அருள் பொழிகிறது. ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர் வதிக்கிறார்.” (அதாவது நீர் காத்தமுல் அன்பியாவாக மாறினீர்.)

“போர் வீரரே ! உமது மகிமையும், உமது மகத்துவமுமாகிய உம்முடைய வாளை நீர் உம்முடைய அரையில் கட்டிக் கொண்டு, சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தி னிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறி வாரும். உமது வலது கரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும்.

உம்முடைய அம்புகள் கூர்மையானவை. அவை ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத் திற்குள் பாயும். மக்கள் உமக்கு கீழே விழுவார்கள்.

தேவனே! உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர். அதனால் உம்முடைய தேவனாகிய தேவனே உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்.” (சங்கீதம் 45:2-7)

இங்கே ‘தேவனே ! உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது’ என்ற சங்கீதத்திலுள்ள இந்த சொற்றொடர் உருவகமாகக் கூறப்பட்டதாகும் என்பதை அறிய வேண்டும். இதன் மூலமாக ஆன்மீகமான முறையில் முஹம்மதிய்ய மகத்துவத்தை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

பிறகு, ஏசாயா நபியின் வேதத்திலும் அவ்வாறே எழுதப்பட்டுள்ளது. அதன் வாசகம் இதுவாகும்: “பாருங்கள். நான் பாதுகாக்கின்ற என் அடியார். என்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். என் உள்ளம் அவர் மீது திருப்தி கொள்கின்றது. நான் என் ஆவியை அவர் மேல் அமரப் பண்ணினேன். அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத் துவார்.

அவர் கூக்குரலிடவுமாட்டார். தமது சத்தத்தை உயர்த்தவும், அதை வீதியிலே கேட்கப் பண்ணவுமாட்டார்.

அவர் நெரிந்த நாணலை முறியாமலும் மங்கி எரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.

அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைநாட்டாத வரை இளக்கரிப்பதுமில்லை; களைப்படைவது மில்லை. அவருடைய வேதத்திற்கு தீவுகள் காத்திருக்கும்.” (ஏசாயா 42 : 1-4)

“கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல் புறப்பட்டு, போர் வீரனைப்போல் வைராக்கிய மூண்டு, முழங்கிக் கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்.”(ஏசாயா 42:13)

இங்கு, கர்த்தர் பராக்கிரமாசாலியைப் போல் புறப்படுவார்......... (ஏசாயா 42 : 13) என்ற சொற்றொடரும் உருவகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கம்பீரமான வருகையை வெளிப்படுத்துகின்றது.

மேலும் இவ்வாறே இன்னும் பல நபிமார்களும் இதே உருவகத்தை தமது முன்னறிவிப்புகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்திற்காக பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அந்த எல்லா இடங்களையும் குறிப்பிடுவதால் நீண்டு விடும் என்பதால், தற்போது நான் குறிப்பிட்ட இத்துடன் போதுமெனக் கொள்கிறேன். மேலும் நான் இந்த இடத்தில் இறைநெருக்கம், இறையன்பு ஆகியவற்றின் மூன்று படித்தரங் களைக் குறிப்பிட்டு மிகச்சிறந்த படித்தரமாகிய மூன்றாவது படித்தரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக நிரூபித்துக் காட்டியிருக் கிறேன். இது என் சார்பாக நான் சுயமாக புரிந்து கொண்ட கருத்து அல்ல; மாறாக, இறைவன் இறையறிவிப்பாக எனக்கு புரியவைத்ததாகும்.

ஜுமுஆ பேருரை

# பூகம்பம் - ஓர் இறை அடையாளம்

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
(ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்)

உலகில் வானம் மற்றும் பூமியின் பேரழிவுகள் வரும்போதெல்லாம் இறை அச்சமுடைய ஒவ்வொருவரும் இன்று ஒரு பகுதியில் வந்திருக்கின்ற பேரழிவு நாளை நம்மை வந்தடைந்து, எவ்வித கஷ்டத்தையும் ஏற்படுத்தி விடக்கூடாதே; நம்முடைய ஏதாவதொரு செயல் இறை கோபத்திற்கு காரணமாகிவிடக் கூடாதே என்று அஞ்சுகின்றனர். ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவர்களிடம் தான் இப்படிப்பட்ட நிலை இருக்க முடியும். இறைவன் எந்தத் தேவையுமற்றவன் என்ற அறிவு யாருக்கு இருக்குமோ அவருக்கு தான் இந்த சிந்தனை இருக்க முடியும். ஒருவருக்கு இந்த சிந்தனை இருந்தால்தான் இறையச்சத்தை மனதில் வைத்து அவனது விருப்பமான வழியில் நடப்பதற்கு அவர் முயற்சி செய்வார். இத்தகைய நம்பிக்கையாளர்களைப் பற்றி இறைவன் கூறுகிறான்:

“நிச்சயமாக அவர்கள் தங்கள் இறைவனுக்கு அஞ்சி நடுங்குகின்றனர். இந்த அச்சத்தின் காரணமாக அவர்கள் தங்கள் இறைவனின் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்கின்றனர். அவர்கள் தங்கள் இறைவனுக்கு யாரையும் இணையாக்க மாட்டார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களை (உரியவர்களுக்கு) கொடுக்கின்றனர். தங்கள் இறைவன் பக்கம் திரும்பச் செல்பவர்களாக இருக்கின்றோம் என்பது குறித்து அவர்கள் உள்ளச்சம் கொண்டிருக்கின்றனர்.” திருக்குர்ஆன் (23:58-61)

உண்மையில் இறைவனை நினைவு கூறுதல் என்பது, இறைவன் எல்லா விதமான கஷ்டங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பாக வைத்திருக்கும் போது அவனை நினைப்பதாகும். ஆனால் சிலர் ஏதாவதொரு பிரச்சனையில் சிக்கும் போது அல்லது ஏதாவதொரு காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பேரழிவுகளைக் காணும் போது மட்டும் இறைவனின் பக்கம் அதிகமாக குனிவார்கள்.

கியாமத் வரை நமக்கு அழகிய முன்மாதிரியாகத் திகழ்கின்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இப்படிப்பட்ட சூழ்நிலை வரும் போது, அவர்களின் நிலை எவ்வாறிருந்தது? என்பதைப் பற்றி **ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள்** தமது ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

“வேகமாகப் புயல் காற்று வீசும் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்வார்கள். அல்லாஹ்வே! இதில் மறைந்திருக்கக் கூடிய ஒவ்வொரு வெளிப்படையான, மறைமுகமான நன்மையையும் வேண்டுகிறேன். மேலும் இதில் மறைந்திருக்கின்ற ஒவ்வொரு வெளிப்படையான, மறைமுகமான தீமையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

வானத்தில் மேகமூட்டங்கள் சூழ்ந்து கொண்டால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகம் மாறிவிடும். வீட்டிற்கு வெளியே வருவார்கள். மீண்டும் திரும்பி உள்ளே செல்வார்கள். முன்னால் போவார்கள். பின்னால் வருவார்கள். மழை பொழிந்தவுடன் அவர்களின் முகத்தில் பதற்றம் மறைந்து விடும். இந்த விஷயத்தை நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகத்திலிருந்தே தெரிந்து கொள்வேன்.

ஒரு முறை நான், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இதற்கான காரணத்தைக் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவே! இது ஆது சமுதாயத்தின் மீது தண்டனையைக்

கொண்டு வந்த மேகங்களைப் போன்று இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் என்று கூறினார்கள்."

இதுதான் முழுமையான இறையச்சம் உடையவரின் செயல்பாடாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு, புயலும் வெள்ளமும் உண்மைக்கு ஆதரவாகத்தான் வருகிறது என்பதும் தெரியும். பத்ர் போராக இருந்தாலும், அகழ் போராக இருந்தாலும், புயலும், சூறைகாற்றும் எதிரிகளை அழிப்பதற்காகவே வந்தது. இருந்தாலும் அவர்களுக்கு கவலையாகவே இருந்தது. உண்மையில் வானத்தின் பேரழிவுகளால் இவர்கள் முழுவதுமாக அழிந்து விடக்கூடாதே என்ற சிந்தனைதான் அவர்களுக்கு இருந்திருக்கின்றது.

இந்த பதற்றம், அந்த உலக அருட்கொடையாளர் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் படைப்பினங்களுக்காக இருந்த கருணையே ஆகும். எந்த அளவு பதற்றம் என்றால், அவர்களது முகமே மாறி விடும் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை என்பதால் சிலரது ஆணவம், இறை வல்லமையைப் புரிந்து கொள்ளாமை போன்றவை முழு சமுதாயத்தையும் அழிப்பதற்கு காரணமாக அமைந்து விடக் கூடாது என்ற கவலையே அவர்களுக்கு இருந்தது.

திருக்குர்ஆனின் ஹூது என்ற அதிகாரத்தைப் பற்றி ஓரிடத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், **இது என்னை கிழவனாக்கி விட்டது** என்று கூறினார்கள்.

கடந்த கால சமுதாயத்தின் முடிவு அல்லாஹ்வுடைய அச்சத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. பிறகு நம்பிக்கையாளர் தமது காலகட்டத்தில் மற்ற சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பேரழிவுகள், எந்த அளவு அச்சத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும், தன்னுடைய இறைவன் பக்கம் குனிய வைக்கக் கூடியவையாகவும், அவனிடம் நேர்வழி கேட்கக் கூடியவையாகவும் இருக்க வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும்.

ஆனால், உலகம் இதனை உணராது. பலரும், காலநிலை மாற்றங்களினால் வானம் பூமியின் பேரழிவுகள் இயற்கை சட்டத்தின்படி சில குறிப்பிட்ட காலங்களில் வரும் என்று கருதுகின்றனர். இது இன்றைய காலத்தின் படித்த அறிஞர்களுடைய இந்த அறிவு அல்லாஹ்வின் வல்லமையையே மறக்கடித்து விட்டது. இயற்கைச் சட்டத்திற்கு ஏற்பதான் பேரழிவுகள் வரும் என்பது சரிதான். அதே போன்று பூமியில் கீழ்பகுதியில் உள்ள அடித்தட்டில் மாற்றங்கள் ஏற்படும் போது அதன் விளைவாக பூகம்பம் வருவது என்பது உண்மைதான். நியூசிலாந்து, ஜப்பான் மற்றும் தீவுகள் பூமியின் டேக்டானிக் தட்டுகள் மீதுதான் அமைந்துள்ளன என்பதும் உண்மைதான். மேலும் இதன் காரணமாகத்தான் இந்தப் பகுதிகளில் அதிக அளவு பூகம்பங்களும் வருகின்றன.

மேலும் இந்தக் காலத்தில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறைநேசர் எவராவது தன்னுடைய உண்மைத்துவத்திற்கு ஆதாரமாக இதுபோன்ற பூகம்பங்களை முன்னறிவிப்பு செய்திருக்கிறாரா என்பதையும் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

மவ்லானா முபஷ்ஷிர் சாஹிப் அவர்கள் கானாவில் முபல்லிக் ஆக இருந்த காலத்தில், கானாவில் இஸ்லாத்தைப் பற்றிய பிரச்சாரம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றிய செய்தியினை மக்கள் மத்தியில் பரப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில் கானாவிலுள்ள ஆலிம்கள் மற்றும் பலர் மஸீஹ் மவ்வூது வருவதற்குரிய அடையாளம் பூகம்பம் ஆகும். எனவே நீங்கள் உங்கள் கூற்றில் உண்மையாளர்களாயின் எங்களுடைய பகுதியில் பூகம்பத்திற்கான அடையாளத்தைக் காட்டுங்கள் என்று கேட்டனர்.

கானாவில் பொதுவாக பூகம்பங்கள் வருவதில்லை. பிறகு அவர்கள் துஆ செய்தார்கள். அதன் விளைவாக அங்கு பூகம்பம் வந்தது. இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது. கிறிஸ்தவர்களிலிருந்தும் பலர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். முஸ்லிம்களில் பலரும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று நினைத்தவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் பூகம்பத்தின் அடையாளம் மிகவும் பிரபல்யமானது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பூகம்பங்கள் போன்றவற்றை தம்முடைய வாதங்களுடன் என்ன ஒப்புமையை கூறியுள்ளார்கள். மேலும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அவர்கள் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி என்ன முன்னறிவிப்பு செய்துள்ளார்கள் என்பதைப் பார்ப்போம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இயற்கைப் பேரழிவுகள் பற்றி எனக்கு கொடுக்கப்பட்ட அறிவு என்னவென்றால், மரணம் எல்லாப் பகுதியிலும் தனது வலையை விரிக்கும். பூகம்பங்கள் வரும்; அதிகமாக வரும். கியாமத்தைப் போன்று இருக்கும். பூமியைப் புரட்டிப் போட்டு விடும். பலருடைய வாழ்வு கஷ்டமானதாகி விடும். பிறகு பாவமன்னிப்புக் கோருபவர்கள் மீதும், பாவங்களிலிருந்து விலகியிருப்பவர்களின் மீதும் இறைவன் கருணை காட்டுவான். எல்லா நபிமார்களும் இந்த காலகட்டத்தைப் பற்றி முன்னறிவித்திருக்கிறார்கள். கட்டாயம் இவையனைத்தும் நடக்கும். ஆனால் உள்ளத்தை தூய்மைப்படுத்துபவருக்கும், இறைவனுக்கு விருப்பமான வழியினை மேற்கொள்பவர்களுக்கும் எந்தவிதமான அச்சமும், கவலையும் இருக்காது.”

**இறைவன் என்னை நோக்கி கூறினான்:** “நீர் எனது சார்பாக அச்சமூட்டுபவர் ஆவீர். தீயவர்கள் நல்லவர்களிடமிருந்து பிரிக்கப்பட வேண்டும்.”

**மேலும் அல்லாஹ் கூறினான்:** “உலகில் ஓர் எச்சரிப்பாளர் தோன்றினார். உலகமோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொண்டு வலுவான தாக்குதல்களால் அவரது உண்மையை வெளிப்படுத்துவான். நான் உமது ஆடையிலிருந்து மன்னர்கள் பரக்கத்தை தேடும் அளவிற்கு உமக்கு பரக்கத் வழங்குவேன்.”

“இறைவன் என்னிடம் கூறினான். பல பேரழிவுகள் ஏற்படும். அதில் சில எனது காலகட்டத்தில் வெளிப்படும். இன்னும் சில எனக்குப் பிறகு வெளிப்படும். மேலும் அவன் எனது வாழ்வில் ஜமாஅத்திற்கு சில முன்னேற்றங்களை வழங்குவான். எனக்குப் பிறகும் சில முன்னேற்றங்களை வழங்குவான்.”

இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதமாகும். இதனைப் பற்றி இந்த வருடம் ஒருமுறை கூறியிருந்தேன். கடந்த 100 வருடங்களில் வந்த பெரிய பெரிய பூகம்பங்கள் இதற்கு முன்பு ஏற்படவில்லை. ஆனால் அவை தற்போதுள்ள 100 வருடங்களில் வந்ததை விட குறைவுதான். அல்லாஹ் இந்த அடையாளங்களை பல பகுதிகளில் பலமுறை வெளிப்படுத்துகின்றான். ஆனால் நாம் இந்த எச்சரிக்கையின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டியதுள்ளது. நாம் நமது நம்பிக்கையை வலுவூட்டவும் வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியை உலகம் முழுவதும் பரப்ப வேண்டிய கடமையும் உள்ளது. என்னுடைய அடையாளம் எனது வாழ்விற்குப் பின்பும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும் என அவர்கள் மிகத் தெளிவாக கூறியிருக்கிறார்கள். உலகிற்கு எந்த அளவு இந்த அடையாளத்தின் பக்கம் அவர்கள் கவனமூட்டினார்களோ, அதே போன்று நாமும் உலகத்திற்கு இதனைப் பற்றி கவனமூட்ட வேண்டும்.

கடந்த வாரம் ஜப்பானில் பூகம்பம்

வந்தது. அதனுடன் சுனாமியும் வந்தது. அது குடியிருப்புகளை முழுமையாக அழித்து விட்டது. பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளை தண்ணீர் எங்கேயோ கொண்டு சென்று விட்டது. **அங்கு இருக்கக் கூடிய நமது ஜமாஅத்தின் குழுவினர் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவி செய்வதற்காக சென்றனர்.** அவர்கள் வழக்கமாக செல்லக் கூடிய வழியில் இருந்த 15, 20 ஆயிரம் குடியிருப்புகளைக் கொண்ட அந்தப் பகுதியைக் காணவில்லை என்றும், சாலைகள் மற்றும் அங்கிருந்த மிகப் பெரிய கட்டடங்கள் கூட தண்ணீரில் போய் விட்டன எனக் கூறிப்பிட்டுள்ளனர். இது மிகவும் அச்சப்பட வேண்டிய நிலையாகும். இப்படி அச்சப்படக் கூடிய வேளையில் நாம் நமது தலைவர் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியின்படி செயல்பட்டவாறு துஆவும் செய்ய வேண்டும். **அல்லாஹ் உலகத்திற்கு உண்மையைப் புரிந்து கொள்வதற்குரிய வாய்ப்பினை தந்தருள்வானாக. மேலும் அவர்களை பேரழிவுகளிலிருந்து காப்பாற்றுவானாக. அவர்கள் பேரழிவுகளில் சிக்கி அழிவதற்குப் பதிலாக அல்லாஹ் அவர்களுடைய உள்ளத்தை திறப்பானாக. இதனுடன் நாம் தூதுச் செய்தியை எட்ட வைப்பதும் அவசியமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஜப்பானியர்களைப் பற்றி நல்லெண்ணம் இருந்தது.** மேலும் தூதுச் செய்தியை எட்ட வைக்கவும் விருப்பம் கொண்டிருந்தார்கள். இப்படி பேரழிவுகள் வரக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு ஒரு நற்செய்தியும் இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நல்ல எண்ணத்திற்கேற்ப அவர்கள் **அல்லாஹ்வின் உண்மையான போதனைகளை ஏற்றுக் கொண்டால் பேரழிவுகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.** ஆகையால் நாமும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியதிருக்கிறது.

அங்கு சிறிய ஜமாஅத் தான் உள்ளது. சிறியதாக இருந்தாலும் முயன்றவரை முழு ஆற்றலுடன் அங்குள்ளவர்கள் இந்த தூதுச் செய்தியை பரப்ப வேண்டும். சிந்தித்து சூழ்நிலைக்கேற்ப இஸ்லாத்தின் தூதுச் செய்தியினையும் பரப்ப வேண்டும். இதனுடன் மக்கள் சேவையும் செய்ய வேண்டும்.

நமது ஜமாஅத் சகோதரர்கள் அங்கு பல இடங்களில் கூடாரம் போட்டு மக்களுக்கு சேவை செய்கின்றார்கள். உணவு போன்றவற்றையும் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த தொடர்பைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இதனால் இஸ்லாத்தின் அழகிய போதனையை எட்ட வைக்க முடியும்.

ஜப்பான் தன்னுடைய வழக்கத்தின்படி ஷின்டோ (Shinto) மதத்தின் மீது பெருமை கொள்கிறது. அல்லது அவர்கள் புத்த மதத்தினராக இருக்கின்றனர். அவர்கள் இரண்டு மதத்தையும் ஜப்பானியர்கள் பின்பற்றுகின்றனர் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். திருமண நிகழ்ச்சியின் போது ஷின்டோ மதத்தின் வழிமுறையைப் பின்பற்றுகின்றனர். மரண சம்பவத்தின் போது புத்தமத வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர்.

என்னுடைய ஜப்பானிய நண்பர் ஒருவர் நல்ல அறிவு மிகுந்த அரசியல் செல்வாக்குள்ளவர். அவர் பேசும் போது எங்களுடைய ஷின்டோ மதத்தின் காரணமாக ஜப்பானியர்கள் இஸ்லாத்தின் பக்கம் கவனம் செலுத்த மாட்டார்கள் எனக் கூறினார். நான் அவரிடம் உண்மையில் ஒழுக்கரீதியிலான நல்ல சிறந்த போதனைகள் அந்த மதங்களில் உள்ளன. இருந்தாலும் ஒருநாள் கண்டிப்பாக இஸ்லாத்தின் பக்கம் வரவேண்டியதுள்ளது எனக் கூறினேன்.

இவர்களுடைய அடிப்படை ஒழுக்க போதனைகளைப் பார்த்தால் ஷின்டோ பல நல்ல ஒழுக்க போதனைகளைக் கொண்டுள்ளது.

இஸ்லாத்தின் பல உயர்ந்த நல்லொழுக்கங்களை அவர்கள் மேற்கொள்வது போன்று தெரிகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜப்பானில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை பரப்புவதற்கு விருப்பம் கொண்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"ஜப்பானியர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. இஸ்லாத்தின் உண்மை பற்றி முழுமையாக எழுதப்பட்ட, இஸ்லாத்தை படம்பிடித்துக் காட்டுகின்ற ஒரு முழுமையான புத்தகம் வேண்டும்; அதில் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை முழுவதும் படம்பிடித்து காட்டுவது போன்று, இஸ்லாத்தின் சிறப்பு அம்சங்களை வெளிப்படுத்த வேண்டும். இதன் எல்லா போதனைகள் குறித்தும் கூறப்பட்டிருக்க வேண்டும். அந்த நூலில் இஸ்லாத்தின் அழகிய போதனைகளும் அதன் பலன்களும் விளைவுகளும் தெளிவுபடுத்திக் காட்ட வேண்டும். அதில் ஒழுக்கரீதியான விஷயங்கள் தனியாக இருக்க வேண்டும். இதனுடன் மற்ற மதங்களுடன் ஒப்புமை செய்து கூறப்பட வேண்டும். அந்த மக்கள் இஸ்லாம் என்றால் என்னவென்று தெரியாமல் இருக்கின்றனர். மேலும் கூறுகின்றார்கள். மற்ற மக்கள் இஸ்லாத்தின் பெயரில் எழுதி வெளியிடும் புத்தகங்களை நம்ப முடியாது. ஏனென்றால் மற்றவர்கள் எழுதக்கூடிய புத்தகங்களில் தவறுகள் அதிகமாக காணப்படுகின்றன. அதனால் நான் அதன் மீது நம்பிக்கை கொள்ள மாட்டேன். இதே தவறுகளுடன் இஸ்லாமிய போதனையை ஜப்பானிய மக்கள் அல்லது மற்ற சமுதாயத்தினர் முன் வைப்பது இஸ்லாத்தை கேலி செய்வதாகி விடும். நாம் கூறுவதுதான் இஸ்லாம் ஆகும். எல்லா விஷயங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான புத்தகத்தை ஜப்பானிய மொழியில் எழுதுவது நமது பொறுப்பாகும். எனது சிந்தனையின்படி அந்த மாதிரியான புத்தகம் இதுவரை எழுதப்படவில்லை. வேறு சில புத்தகங்கள் ஜப்பானிய மொழியில் இருக்கின்றன. இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். தற்போது அப்படி ஒரு புத்தகம் இருந்தால் ஒரு ஜப்பானியரிடம் ஆயிரம் ரூபாய் கொடுத்தாவது (அக்காலத்தில் ஆயிரம் ரூபாய் என்பது பெரும் தொகையாகும்) மொழியாக்கம் செய்யப்பட வேண்டும்."

இவ்வாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கூட்டத்தில் கூறினார்கள்.

திருக்குர்ஆன் ஜப்பானிய மொழியாக்கம் தற்போது மீண்டும் சரிசெய்யப்படுகிறது. நமது ஜமாஅத்துடைய முபல்லிக் ஜனாப் ஸியாவுல்லாஹ் சாஹிபும் நமது ஜப்பானிய சகோதரர் ஒருவரும் அந்தப் பணியை செய்து கொண்டிருக்கிறார்கள். அது முழுமை அடையக் கூடிய தருவாயில் உள்ளது.

ஜப்பானைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1945 ஆம் ஆண்டு ஒரு ரூஃயா (ஆன்மீகக் காட்சி) கண்டார்கள். அது பற்றி அவர்கள் கூறுகிறார்கள்:

"ஜப்பானியர்கள் தற்போது ஆன்மீகமாக மரணித்த நிலையில் உள்ளனர். அல்லாஹ் அவர்களின் உள்ளத்தில் ஆர்வத்தை உண்டாக்குவான். பிறகு அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஆற்றல் பெறுவார்கள். மேலும் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய அழைப்பிற்கு பறவைகள் செவிசாய்த்ததைப் போன்று ஜப்பானியர்கள் எனது அழைப்பிற்கு செவிமடுப்பார்கள். இன்று இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அல்லாஹ் தப்லீக் செய்வதற்குரிய வாய்ப்புகளையும், சேவை செய்யக்கூடிய வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறான். இதில் முன்னேறுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்."

இன்று எல்லா சமுதாயங்களையும் எச்சரிப்பது நமது வேலையாகும். ஜப்பானில் வந்த இந்த பூகம்பம் மற்றும் சுனாமி இது ஆயிரம்

வருட வரலாற்றில் இதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை என்று சிலர் கூறுகின்றனர். உலகில் ஜப்பானும் நிலநடுக்கம் வரக்கூடிய நாடாகும். ஆகையால் ஜப்பானியர்கள் பூகம்பங்களுக்கேற்ப தமது குடியிருப்புகளை அமைத்துக் கொள்கின்றனர். ஆனால் இறை வல்லமை வெளிப்படும் போது பிறகு எதுவும் எதிர்த்து நிற்க முடியாது.

மனிதன் நான் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்து விட்டேன். சில பொருட்களை உபயோகம் செய்து புதிய புதிய கண்டுபிடிப்புகளை செய்துள்ளேன் என்று நினைக்கிறான். ஜப்பான் பொதுவாக இரண்டாம் உலகப்போரில் அமெரிக்காவால் போடப்பட்ட அணுகுண்டுவின் விளைவால் ஜப்பானியர்கள் மிகப்பெரிய அழிவுக்கு உள்ளான காரணத்தால் அணு உபயோக தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இருந்தாலும் மனிதனுடைய நலனுக்கு அணு உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் பூகம்பத்திற்கு பிறகு அணு உலைகளும் மனிதனை அழிக்கிறது. கதிர்வீச்சு பரவிக் கொண்டிருக்கிறது. ஹெலிகாப்டர் மூலமாக அதனை குளிர்விக்க வேலை நடைபெற்று வருகிறது. இந்த முயற்சி பலன் தராததால் பீரங்கி மூலமாக இந்த வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என தற்பொழுது ஃபேக்ஸ் வந்தது. இருந்தாலும் அல்லாஹ் அவர்கள் மீது அருள்புரிவானாக. மேலும் அழிவிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவானாக. ஆனால் நான் அங்குள்ள தன்னார்வத் தொண்டு செய்யும் நமது ஜமாஅத் சகோதரர்களிடம் **ரேடியம் புரோமைடு சி.எம்., கார்சினோசின் சி.எம் போன்ற ஹோமியோபதி மருந்துகளை உபயோகபடுத்துங்கள் என்று கூறினேன்.** முதல் நாள் ஒரு மருந்தும் மறுநாள் இன்னொரு மருந்தும், பிறகு ஒரு வாரத்திற்குப் பிறகு முதல் மருந்தும், இரண்டு வாரத்திற்குப் பிறகு இரண்டாவது மருந்தும் உபயோக்கப்படுத்த வேண்டும். ஆக 2 வாரத்திற்கு ஒரு தடவை 1 மருந்தின் முறை வரும். இதனை மற்றவர்களுக்கும் கொடுங்கள். இது அங்கு கிடைக்கவில்லை யென்றால் மற்ற உதவிகள் செய்யக் கூடிய Humanity First இந்த மருந்துகளையும் அனுப்பிக் கொடுக்க வேண்டும். ஆக, தற்போது ஜப்பானில் பூகம்பமும், கடல் சீற்றமும், கதிர்வீச்சும் அழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. பூகம்பம் வந்தது. பிறகு சுனாமி வந்தது. பிறகு சென்று விட்டது. ஒருவேளை கதிர்வீச்சு பரவியது என்றால் இதன் விளைவு சந்ததிகள் மீது நீடித்துக் கொண்டே செல்லும். குழந்தைகள் ஊனமுற்றுப் பிறப்பார்கள்.

அல்லாஹ் இவர்கள் மீது கருணை காட்டுவானாக. நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று கூறக்கூடிய சமுதாயங்களும், காலத்தின் இமாமுடைய முன்னறிவிப்பிற்கேற்ப அவர்களும் பாதுகாப்பாக இல்லை. அவர்கள் இப்பொழுதும் கவனம் செலுத்தவில்லையென்றால் பேரழிவுகள் ஒவ்வொருவரையும் தனது பிடியில் இழுத்துவிடும். இவர்களுக்கு இறைவன் அல்லாஹ்வை கண்டறியும் நல்வாய்ப்பினை வழங்குவானாக.

புயல் மற்றும் மழையைப் பார்த்ததும் பதற்றமடைந்த அந்த நபி (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியை இஸ்லாமிய சமுதாயங்கள் கடைபிடிக்க வேண்டும். அதன்படி அமல் செய்கின்றோமா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் அதற்காக வருத்தப்பட வேண்டும்.

பாகிஸ்தானில் கடந்த வருடம் வெள்ளம் வந்தது. அது அந்நாட்டு வரலாற்றில் மிக மோசமான சம்பவமாகும். சர்ஹதிலிருந்து சிந்து வரை முழுவதுமாக அழித்து விட்டது. ஆராய்ச்சியாளர்கள் இது சுனாமியை விட மோசமான அழிவு என்று கூறியிருக்கிறார்கள்.

இருந்தபோதிலும் மக்களுக்கு என்ன நடக்கிறது? என்று தெரியவில்லை. ஆனால் காலத்தின் இமாமை மறுத்துக் கொண்டே செல்கிறார்கள். கடந்த வருடம் வெள்ளம்

ஏற்பட்ட போது, ஒரு மவ்லவி தொலைக்காட்சியில் மக்களுக்கு உரையாற்றினார். அதில் அவர் இந்த வெள்ளம் நம் மீது தண்டனைக்காக இறக்கப்பட்டது கிடையாது. இது ஒரு சோதனை ஆகும் என்றும், இறை அடியார்களுக்கு சோதனை வரும் என்றும் கூறினார். மேலும் தண்டனை நபி வரும்போதுதான் வரும் என்று ஒப்புக் கொள்கின்றனர். தற்போது எந்த நபியும் கிடையாது. ஆதலால் இதனை தண்டனை என்று கூற முடியாது எனக் கூறினார்.

ஆனால் ஒருவர் நபி என்று வாதிட்டிருக்கிறார். அதனை கேட்பதில்லை. அல்லாஹ் இந்த சமுதாயத்தின் மீதும் கருணை புரிவானாக. சில வருடங்களுக்கு முன்பு மிகக் கொடூரமான ஒரு பூகம்பம் வந்தது. அதன் பிறகும் இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அவனுடைய நபியினால் அனுப்பப்பட்ட முன்னறிவிக்கப்பட்ட பேரழிவினைப் பற்றி சிந்திப்பதில்லை. ஆனால் மறுக்கின்றனர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இறைவன் எனக்கு பல பூமியதிர்ச்சிகளைப் பற்றி முன்னறிவித்திருப்பதை நினைவில் கொள்ளுங்கள். அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் ஆட்டிப்படைத்ததைப் போல் **ஆசியாவையும் அது கண்டிப்பாக ஆட்டிப்படைக்கும்** என்பதை உறுதியாக நம்புங்கள். அவற்றுள் சில இறுதி நாளை நினைவுபடுத்தும் விதத்தில் இருக்கும். மரணத்தினால் இரத்த ஆறுகள் ஓடும். பறவைகளும் விலங்குகளும் கூட தப்பிக்க முடியாது. மனிதன் பிறந்ததிலிருந்து இன்று வரை வராத பேரழிவுகள் வரும். அதிகமான கட்டடங்கள் அழிந்து விடும். மக்களே வாழாதது போன்று தோற்றமளிக்கும். இதைத் தொடர்ந்து இன்னும் பல அழிவுகள் வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உண்டாகும். நேர்மையுடன் சிந்திக்கும் ஒவ்வொருவரும் இவை அசாதாரணமான முறையில் சம்பவிக்கின்றன என்று உணர்ந்து கொள்வர். வானசாஸ்திரம் மற்றும் தத்துவம் பற்றிய புத்தகங்களிலும் அதனைப் பற்றி அடையாளம் காணப்படாது. அப்போது என்ன நடக்கப் போகிறது என்று பதற்றம் மனிதனிடம் நிலவும். பலர் காப்பாற்றப்படுவர். பலர் அழிந்து போய் விடுவர். உலகம் கியாமத்தைப் போன்ற காட்சியைப் பார்க்கக் கூடிய நேரம் அருகில் இருக்கிறது. அது வாசலில் நிற்பதை நான் காண்கின்றேன். **மேலும் பூகம்பம் மற்றும் வேறு பல பேரழிவுகள் வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் வெளிப்படும்.** இவை அனைத்தும் மனிதன் இறைவனை வழிபட மறுத்ததாலும், எல்லாவிதமான ஆற்றல், சக்தி, சிந்தனை மற்றும் உள்ளத்துடன் உலக இன்பங்களில் மூழ்கி விட்டதனாலும் ஆகும். நான் வரவில்லையென்றால் இந்த பேரழிவுகளில் தாமதம் ஏற்பட்டிருக்கும். ஆனால் நான் வந்ததனால் பல காலமாக மறைந்திருந்த கோபத்தின் மறைமுக திட்டம் வெளிப்பட்டு விட்டது.

**நாம் தூதரை அனுப்பாத வரை தண்டனை வழங்குவதில்லை. (17:16)**

பாவமன்னிப்புக் கோரக்கூடியவர்கள் அமைதியை பெறுவார்கள். துன்பம் வருவதற்கு முன்பே அச்சம் கொண்டவர்கள் மீது கருணை காட்டப்படும். நீங்கள் இந்த பூகம்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? மேலும் தமது திட்டத்தின் மூலம் இதிலிருந்து தப்பித்து கொள்ளலாம் என நினைக்கிறீர்களா? ஒருபோதும் முடியாது. அன்று மனிதனுடைய எல்லா திட்டங்களும் தோல்வி அடைந்து விடும். அமெரிக்கா போன்ற நாடுகளில் பூகம்பங்கள் வந்தது. ஆனால் நாம் பாதுகாப்பாகத்தான் இருக்கிறோம் என்று எண்ண வேண்டாம். நீங்கள் அதனை விட மிகப்பெரிய பேரழிவை சந்திப்பீர்கள் என பார்க்கின்றேன்.

ஐரோப்பாவே! நீ பாதுகாப்பில் இருக்கிறாய் என்று நினைக்காதே. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இருக்கிறாய் என்று

நினைக்காதே. தீவுகளில் உள்ளவர்களே! உங்களால் உருவாக்கப்பட்ட கற்பனை தெய்வங்கள் எவையும் உங்கள் விடுதலைக்கு வரப்போவதில்லை. நகரங்கள் விழுவதையும், குடியேற்ற நாடுகள் அழிவதையும் நான் காண்கிறேன். ஏக இறைவனோ நீண்ட காலமாக மவுனமாக இருந்து வந்தான். அவன் முன்னால் மக்கள் பொல்லாத பாவங்கள் செய்வதை அவன் கண்டும் காணாமல் இருந்து வந்தான். ஆனால் இனிமேல் அவன் தன் முகத்தை கம்பீரத்துடனும் வல்லமையுடனும் வெளிப்படுத்தப் போகிறான். செவியுள்ளவர்களே! கேளுங்கள். அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை. அனைவரையும் அல்லாஹ்வின் பாதுகாப்பின் கீழ்கொண்டு வர நான் முயற்சி செய்தேன். ஆனால் இறை நியதிதான் கண்டிப்பாக நிறைவேறும். நான் உண்மையாக கூறுகிறேன். இந்த நாட்டின் அழிவும் மிக அருகில் இருக்கிறது. நூஹின் காலகட்டம் உங்கள் கண் முன்னால் வந்து விடும். லூத்தின் சமுதாய நிலையை நீங்கள் கண்கூடாகப் பார்ப்பீர்கள். ஆனால் இறைவன் கோபப்படுவதில் பொறுமையாளனாக இருக்கின்றான். இறைவனை கைவிடுபவன் புழுவாவான். அவன் மனிதனே கிடையாது. அவனிடம் அச்சம் கொள்ளாதவர்கள் மரணித்தவர்களே, உயிருள்ளவர்கள் அல்ல.” (ஹகீகத்துல் வஹி - ரூஹானிகஸாயின் தொகுதி 22 பக்கம் 268-269)

துணைக் கண்டத்தில் வசிக்கின்ற முஸ்லிம்களும் பாதுகாப்பில் இல்லை. அவர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல தடவை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அந்த வலியுறுத்தலிலும் ஒரு விதமான அனுதாபம் இருந்திருக்கிறது. ஆகையால் நாமும் அனுதாபத்தை முன்வைத்து உலக மக்களுக்கு தூதுச் செய்தியினை பலமுறை வலியுறுத்திக் கூற வேண்டிய அவசியம் உள்ளது. **இந்தியாவில் வாழக்கூடிய முஸ்லிம்களும் தங்களுடைய நிலையை மாற்றுங்கள்.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றிய தீய எண்ணத்தை விட்டு தவிர்ந்து கொள்ளுங்கள். பங்களாதேஷில் உள்ள முஸ்லிம்களும் தனது நாவை கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். பாகிஸ்தான் மக்களும் சுதாரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பேரழிவுகளை கண் முன்னால் கண்டிருக்கிறீர்கள். தீவுகளில் வாழக்கூடிய மக்களுக்கு வந்த பேரழிவுகளிலும் தற்போது ஜப்பான் எந்த நிலைமையில் இருக்கிறதோ இது உலகத்திற்கு படிப்பினையை பெறக்கூடியதாக இருக்க வேண்டும்.

அல்லாஹ் இதன் உண்மை நிலையை முஸ்லிம்கள் உணரும்படி செய்வானாக. மேலும் காலத்தின் இமாமின் தூதுச் செய்தியை புரியக்கூடிய மக்களாக ஆக்குவானாக. தற்போது இயற்கைப் பேரழிவுகளைத் தவிர ஒவ்வொரு முஸ்லிம் நாடுகளும் தத்தமது நாட்டின் உள்நாட்டு பூசலில் மூழ்கியுள்ளனர். இதுவும் அந்த நாடுகளுக்கு ஒரு சோதனையாகவே அமைந்துள்ளது. மக்களும் அரசும் ஒருவருக்கொருவர் எதிரியாகி விட்டனர். ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமை கொலை செய்கின்றான். இதனை விட மோசமான வேதனையளிக்கக்கூடிய நிலைமை இந்த சமுதாயத்திற்கு வேறென்ன இருக்க முடியும் ? அந்தோ! இவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்களா?

சமுதாயத்தின் நன்மைக்காக யாரை அனுப்ப வேண்டுமோ அல்லாஹ் அவரை அனுப்பி விட்டான். பாதுகாப்பு வேண்டுமென நினைத்தார்கள் என்றால் இங்கு வந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்ளட்டும். அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அல்லாஹ் நம்மையும் உண்மையான முஸ்லிம்களாக ஆக்குவானாக. அனுதாபத்துடன் உண்மை இஸ்லாத்தை பரப்பக்கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக. மேலும் துஆவில் முன்பை விட அதிகமாக ஈடுபடக்கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக.



தமிழக தென்மண்டல அமீர்
ஜனாப் A.P.Y அப்துல் காதிர் சாஹிப்



தமிழக வடமண்டல
இஸ்லாஹ் வ இர்ஷாத் செயலர்
ஜனாப் M. நயீம் அஹ்மது சாஹிப்



தமிழக வடமண்டல
வக்ஃபே நவ் செயலர்
ஜனாப் T.J. முனவ்வர் இப்ராஹிம்



சங்கரன்கோவில் ஜமாஅத்
மூத்த உறுப்பினர்
ஜனாப் K. முஹம்மது அலி சாஹிப்



சென்னை ஜமாஅத்தின்
கொள்கை பரப்புநர்
மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது



கொள்கை பரப்புநர்
மவ்லவி K. மஹ்மூது அஹ்மது



கோட்டார் ஜமாஅத்தின்
கொள்கை பரப்புநர்
மவ்லவி M. ரஃபீக் அஹ்மது



கோயம்புத்தூர் ஜமாஅத்தின்
இளைஞர் அணி தலைவர்
ஜனாப் A.M. ஃபெரோஸ் கான்



சிறப்பு விருந்தினர் அவர்கள் மாநாட்டு
அரங்கிற்கு வரும் காட்சி



மாநாட்டு நிறைவில் துஆ
செய்யும் காட்சி



தமிழக வடமண்டல அமீர், இந்திய
முதன்மைச் செயலரை விமான
நிலையத்தில் வரவேற்கும் காட்சி







கோயம்புத்தூர் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள்
இந்திய முதன்மைச் செயலர் அவர்களை விமான நிலையத்தில் வரவேற்கும் காட்சி

NABI VAZHI Tamil Monthly. March & April 2011. Regd with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211



அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின்
இந்திய முதன்மைச் செயலர் சிறப்புரையாற்றும் காட்சி



அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தமிழக
வடமண்டல அமீர் தலைமை உரையாற்றும் காட்சி



அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு. R. இராஜமாணிக்கம் அவர்கள்
வாழ்த்துரை வழங்கும் காட்சி




சட்ட மன்ற உறுப்பினர் திரு. S.P. வேலுமணி அவர்கள்
வாழ்த்துரை வழங்கும் காட்சி




கோயம்புத்தூர் நாஸிராத் சிறுமிகள்
உருது கவிதை பாடும் காட்சி



மாநாட்டிற்கு வருகை தந்தவர்களின்
ஒரு பகுதி

Printed & Published By : K. NASIR AHMED. From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24
Editor : O.M. MUZZAMMIL AHMAD. Printed at : Script Printers, Periyar Pathai, Choolaimedu, Chennai - 600094